# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 | விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, வைகாசி 21உ (3—6—73) ஞாயிறு ஜ:அவ் 1 —புத்தகம் 26 இதழ் 25


## கம்யூனிஸ்டுகளின் இரட்டை நாக்கு!

''எம்.ஜி.ஆர். ஏழை மக்களின் நண்பன், பொதுவுடமைக் கொள்கையை கடைப்பிடித்துவருபவர்.''
(—சுன்னாகத்தில் நடைபெற்ற குடியரசு விழாவில் வி. பொன்னம்பலம்.)

''அ.தி.மு.க. ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சியோ, மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கட்சியோ அல்ல—அது ஒரு பூர்சுவாக் (முதலாளித்துவக்) கட்சியே.''
—தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. பாலதண்டாயுதம் எம்.பி. (வீரகேசரி-28.5,73)

## 'சுப்பையாவுக்கும் வெள்ளைச்சாமிக்கும் காணி கொடுக்க மாட்டோம்'

# சொல்லைச் செயலாக்குகிறது சிங்கள அரசு!

# வடக்கு, கிழக்கில் மலையகத் தமிழர்கள் குடியேறுவதைத் தடுக்க விசேட சட்டம்!

## சிங்கள அரசின் இனத் துவேஷம்! சோசலிச முகமூடி கிழிகிறது!

நிலமற்ற ஏழைகளுக்கு நிலம் வழங்கப் போவதாகத் தம்பட்டமடித்து வரும் இலங்கை அரசு, இந்திய வம்சாவளியினரான நிலமற்ற மலைநாட்டுத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்கத் தரிசு நிலங்களில் குடியேறுவதைத் தடுக்கவும், இப்போது குடியேறி விவசாயத்திலீடுபட்டு இருக்கும் தொழிலாளர்களை அங்கிருந்து விரட்டவும் மனிதாபிமானமற்ற சர்வாதிகார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது.

'வெள்ளைச்சாமிக்கும் சுப்பையாவுக்கும் காணி கொடுக்கமாட்டோம்' என்று பகிரங்கமாக பாராளுமன்றத்தில் காணியமைச்சர் கொப்பேகடுவ முன்பொரு தடவை கூறியதை இப்போது தீவிரமாக செயல்படுத்த முனைந்திருக்கிறது சிங்கள அரசு.

திருகோணமலை, கந்தளாய்ப் பகுதிகளில் அரசாங்கக் காணிகளில் இதற்கு முன்னர் அத்துமீறிக் குடியேறிய சிங்களவர்களுக்கு எதிராக எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் இப்போது இந்திய வம்சாவளியினர் குடியேறியவுடன் அவர்களுக்கு எதிராக மட்டும் கடும் நடவடிக்கை யெடுக்கப் படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புனானை, வாழைச்சேனை, வாகனேரி போன்ற பகுதிகளில் குடியேறி பயிர்ச் செய்கையிலீடுபட்டிருக்கும் இந்திய வம்சாவளித் தமிழர்களை அங்கிருந்து விரட்டுவதற்கு அரசாங்கம் சட்ட நடவடிக்கையெடுத்து வரும் அதே வேளையில் அரசாங்க காணிகளில் அத்துமீறி குடியேறுபவர்களையும், அப்படிக் குடியேறும் படி தூண்டுபவர்களையும், அதற்கு உடந்தையாகவிருப்பவர்களை தண்டிப்பதற்கான விசேட சட்டம் ஒன்றையும் அரசு அவசரமவசரமாகத் தயாரித்து வருகிறதாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசாங்க காணிகளில் இந்திய வம்சாவளித் தமிழர்கள் குடியேறுவது 'இலங்கையின் பாதுகாப்புக்கு' ஒரு பிரச்சினையாக உருவாகி வருவதால் அதனைத் தடுப்பதற்காகவே புதிய சட்டம் கொண்டு வரப்படவிருப்பதாக நீதியமைச்சின் செயலாளர் பகிரங்கமாக தெரிவித்திருக்கிறார்.



(7-ம் பக்கம் பார்க்க)

## வி. பிக்கு ஒரு சவால்!

'கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஐந்து அம்சத்திட்டம் ஒன்று தற்சமயம் வெளியிடப்பட்டுள்ளது. அக்கோரிக்கைகளில் ஒன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சுயாட்சி அளிப்பது என்பதாகும். இந்தத்திட்டம் கம்யூனிஸ்ட் கட்சியால் ஏற்கப் பட்டதா? அல்லது, வி. பொன்னம்பலத்தினால் தயாரிக்கப்பட்டதா? உண்மையில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாக இருந்தால் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பீட்டர் கெனமன் மூலம், தேசிய பேரவையில் அதைச் சமர்ப்பிக்க திரு. வி. பொன்னம்பலம் முன் வருவாரா?

—நாவலர் அமிர்தலிங்கம் (கட்டுவன் கருத்தரங்கில் பேசியது)

## பறிமுதல் செய்த கட்டிடத்தை பௌத்தர்களுக்கு வழங்கத் திட்டம்!

கொழும்பு கொம்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் ரூபா 75000 செலவில் கட்டி முடிக்கப் பட்ட சைவ கலாசார கட்டடத்தை அரசாங்கம் அண்மையில் திடீரென சுவீகரித்தது தெரிந்ததே.

இச்சுவீகரிப்பை எதிர்த்து, சுவீகரித்த கட்டடத்தை சைவ முன்னேற்றச்சங்கத்திடம் கையளிக்க வேண்டுமென சைவ மக்கள் அரசாங்கத்தை கோரிவருகின்றனர்.

அதே வேளையில் சைவ மக்களின் கோரிக்கையை புறக்கணித்துவிட்டு, சுவீகரித்த கட்டிடத்தை பௌத்த சங்கம் ஒன்றுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுவருவதாக தெரிகிறது.

இந்த அநியாயத்தைஎதிர்த்து சைவ மன்றங்களும், சைவ மக்களும்அணிதிரண்டு போராடவுள்ளனர்

## தமிழில் வெளிவராத படிவங்கள் எத்தனை? பண்டிதரின் கேள்வி

ஒவ்வொரு அமைச்சிலும், அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள், கிளை அலுவலகங்கள் கூட்டகங்கள், அரசாங்க, அல்லது அரசாங்க சார்பான பிற நிறுவகங்கள் என்பனவும் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு வெளியிட்டுள்ள படிவங்களில் இன்னும் தமிழிலும் வெளியிடப்படாத, அல்லது தமிழும் இடம் பெருத படிவங்களையும் அவை ஒவ்வொன்றின் எண் முதலிய விபரங்களையும் கூறும்படியும், எப்பொழுது இப் படிவங்கள் தமிழிலும் வெளியிடப்படும் என்பதை அறிவிக்கும்படியும் எல்லா அமைச்சர்களையும்

(7-ம் பக்கம் பார்க்க)

## செல்வாவை வரவேற்கத் திருகோணமலை திரளுகிறது!

தமிழர் கூட்டணித் தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்திற்கு திருகோணமலையில் பிரம்மாண்டமான ஊர்வலத்துடன் கூடிய பெரும் வரவேற்பு காத்திருக்கின்றது. இந்த வரவேற்பை திருகோணமலை மக்கள் எதிர்வரும் 10ம் திகதி அளிக்கவிருக்கின்றனர்;

மேற்படி தினத்தில் தமிழர் கூட்டணியின், செயற்குழு திருகோணமலை தம்பலகாமத்தில் கூட விருக்கின்றது. தமிழர் கூட்டணி தலைவர்கள் பா. உக்கள் உட்பட ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கமும் இதற்கென திருமலை வரவிருக்கின்றனர்.

காங்கேசன்துறை பா. உ. பதவியை துறந்தபின் முதன் முதலாகத் திருகோணமலைக்கு செல்வா விஜயம் செய்கின்றார். வரவேற்பு ஒழுங்குகள யாவற்றையும் திருகோணமலை தமிழ் வாலிபர்கள் கவனிக்கின்றனர்.

### வரவேற்புப் பூரணகும்பமும்!

திருகோணமலை மடத்தடிச் சந்தியில் பிரம்மாண்டமான அலங்காரப் பந்தலின் கீழ் திருமலை மக்கள் சார்பில் தமிழர் தந்தை செல்வா வரவேற்கப்படுவார். அவருடன் வரும் திரு. சி. சுந்தரலிங்கம் தமிழர் கூட்டணி பா. உ.க்

(7ம் பக்கம் பார்க்க)

## ஏழை வயிற்றில் மேலும் அடி! மா, சீனி, பாலுணவு விலை இரட்டிப்பு!

பால் லக்ஸ்பிரே போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையை திடீரென உயர்த்தியதன் மூலம், ஏற்கெனவே நாள் தோறும் விலைவாசி உயர்வால் வாடிக்கிடந்த ஏழை, நடுத்தர, தொழிலாள வர்க்கத்தினரின் வயிற்றில் எட்டி உதைத்திருக்கிறது முக்கூட்டு முன்னணி அரசு!

குழந்தைகளினதும், பொது மக்களினதும் அதி முக்கிய உணவான பாலுக்கும் மற்றும் பாலுணவுப் பொருட்களுக்கும் விலை அதிகரிக்கப்பட்டதால், வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாது மக்கள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக தம் குழந்தைகளுக்கு பால் உணவு வாங்கிக்கொடுக்க முடியாத நிலையில் பொதுமக்கள் தவிக்கும் அதே வேளையில் ஹோட்டல்களிலும், தேனீர் கடைகளிலும் பால் தேநீர் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதே வேளையில் கறுப்புச் சீனியின் விலை மேலும் இருத்தலுக்கு 15 சதத்தாலும், வெள்ளைச்சீனியின் விலை 25 சதத்தாலும், பாலின் விலை 10 சதத்தாலும் உயர்த்தப் பட்டிருக்கிறது.

அநியாய அக்கிர ஆட்சி ஒழியாதா? எங்கள் வாழ்வு மலராதா என குடும்பத் தலைவிகள் திட்டுவதை நாள் தோறும் கேட்கக் கூடியதாக விருக்கிறது.

மக்களின் வருவாயை அதிகரிக்க வழிகாணமல் விலைவாசியைக் கூட்டி மக்களை வாட்டி வதைப்பதற்கு பெயர்தான் சோசலிசமா என்று கொதித்தெழும் பொது மக்கள் கேட்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்



சி. சண்முகரட்னம்,
பாலாவோடை,
காரைநகர்.

கே: காங்கேசன் துறை இடைத்தேர்தலில் தந்தை செல்வாவுடன் யாராவது போட்டியிடுவார்களா? போட்டியிட்டால் என்ன பெறுவார்கள்?

ப: கட்டுப்பணத்தை இழப்பார்கள்; வரலாற்றில் துரோகி என்ற அழியாத வடுவையும் சுமப்பார்கள்.

ஃ

மல்லிகா மனோன்,
களபூமி,
காரைநகர்.

கே: 'கலைக்குரிசில்' சிவாஜி கணேசன் தி. மு. க. வுக்கு எதிர்ப்பா?

ப: ஆம், அவர் காமராசர் கட்சியை ஆதரிப்பவர்! ஆரம்பத்தில் கழகத்தில் இருந்தவர்.

கே: வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள், எம். பி. ஆ. தியாகராசா அவர்களை எதிர்ப்பதன் மர்மம் என்ன?

ப: துரோகிகளை வட்டுக்கோட்டைத்தொகுதி மக்கள் எப்பொழுதுமே ஆதரிப்பவர்கள் அல்ல 1970 தேர்தலில் விட்ட பிழைக்காக இப்போது வருந்துகிறவர்கள் அவர்கள்!

ப: எம் ஜி. ராமச்சந்திரன் இப்பொழுது என்ன செய்து கொண்டு இருக்கின்றார்?

ப: தி.மு.க. வை எதிர்த்து தூக்குமேடை ஏறவும் தயாரென்று பேசித்திரிகிறார்.

ஃ

"அக்கரைசக்தி"
அக்கரைப்பற்று7.

கே:— தமிழர் கூட்டணி கிழக்குப்பிரதேசத்தில் அதிக கவனம் செலுத்தாமல், வடக்கிலேயேகூடியசிரத்தை எடுக்கிறது என்பதரவலான தவறான அபிப்பிராயம்இங்கு நிலவுகிறது என்பதை அறிகிறேன். இவ்விடயத்தைத் தெளிவுபெறச் செய்வீர்களா?

ப:— கிழக்கில் தமிழர் கூட்டணியை வேகமாக இயங்கவைக்க வேண்டிய தலைவர்கள் சுறுசுறுப்புடன் செயல்படுகிறார்களில்லை. இவர்களை வேகமுடன் இயங்க வைக்க வேண்டிய பொறுப்பு உணர்ச்சி மிக்க இளைஞர்களுடையது!

கே:— யூ.என் பி.அரசாங்கத்தில் ஒரே ஒரு தமிழ் அமைச்சராயிருந்த திருச்செல்வத்திற்கும், தற்போதைய ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஒரே ஒரு தமிழ் அமைச்சராயிருக்கும் திரு. செல்லையா குமாரசூரியருக்குமிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப:— இருவரும் நியமன உறுப்பினர்கள். இது ஒற்றுமை. திருச்செல்வம் விடுதலை வீரர்களின் பிரதிநிதியாகத்திகழ்ந்தார் குமாரசூரியர் எட்டப்பர்களின் பிரதிநிதியாக இருக்கிறார்.

ஃ

கே. யோகன்
(வண்ணைபூரான்)

கே:— திமிர் வால் பிடி ராசாவுக்கு என்ன மந்தி(ரி) பதவி கிடைக்கும்?

ப:— அங்கொடைஅமைச்சர் பதவிதான் பொருத்தமாகவிருக்கும்!

கே:— எனது நண்பர் மகாத்மா காந்தியுடன் குமாரசூரியரை ஒப்பிட்டுப் பேசுகிறாரே இது சரியா?

ப:— மகாத்மா காந்தி யாருடைய முந்தானையை நக்கித்திரிந்தாராம்?

ஃ

க. சோதிலிங்கம்
கைதடி தெற்கு
கைதடி

கே:— தமிழர் விடுதலைக்கு என்ன செய்ய வேண்டும்?

ப:— தமிழினம் விடுதலை பெற்றேயாக வேண்டும் என்ற தன்னம்பிக்கையை ஒவ்வொரு தமிழனிடமும் வளர்க்க வேண்டும்!

ஃ

செல்வன். க. செல்வராசா
இராமநாதபுரம்

கே:— வடபகுதியில் சாராயவடிசாலை நிறுவுவதால் தமிழன் என்ன நிலை அடைவான்.

ப:— உண்மையான 'குடி' மகனாக மாறுவான்!

## குயுக்தியாருக்கு ஒரு வாசகரின் சூடு!

"விரைவில் எம். ஜி. ஆர். விலாசம் தெரியாமல்போய்விடுவார்" என்று எழுதிய குயுக்தியார் அவர்கட்குக் காணிக்கையாக திண்டுக்கல் பாராளுமன்றத் தொகுதியில் அண்ணா தி. மு. க. சார்பில் போட்டியிட்டு1,41,000 வாக்குகளால் வென்ற செய்தியைத்திரு.மாயத்தேவர் மூலமாக சமர்ப்பிக்கிறோம். தயதுசெய்து இனி மேலாவது அ. தி. மு. க. வையோ, எம்.ஜி. ஆரையோ தாக்கி, செய்திவெளியிடுவதைத் தவிருங்கள்.

வாழ்க அண்ணு!

வாழ்க எம்: ஜி: ஆர்!

— த. பத்மனுபன்
கொழும்பு.

சி. சிவனேசன்
பூமாஞ்சோலை
அல்வாய்

கே: நமது ஈழநாட்டிற்கு திருமதி. இந்திராகாந்தி பிரதம மந்திரியாயிருந்தால் நமது நாடு எப்படியிருக்கும்?

ப: இலங்கை ஒருசமஷ்டிக் குடியரசாக இருந்திருக்கும்!

கே:— எம்.ஜி.ஆர். தனது பாரத்பட்டத்தை திருப்பி கொடுத்துவிட்டாரா?

ப:— திருப்பிக்கொடுத்தார்; பின் திருப்பி எடுத்தும் விட்டார்.

கே: தமிழர்களாகிய நாம் அறிஞர் அண்ணுவின் வழிகளை பின்பற்றினல் எப்படியிருக்கும்?

ப: சுபீட்சப்பாதைக்கு நம்மை இட்டுச்செல்லும்!

ஃ

சி. நாகநாதன்
யாழ்ப்பாணம்

கே:— ஐ. நா. மனித உரிமை சாசனத்தை, ஐ— நா. சபையில் அங்கம் வகிக்கும் இலங்கை அரசு புறகணித்து நடக்கின்றது. ஐ. நா. சபையும். ஐ. நா. சபையில் அங்கம் வகிக்கும் பிற நாடுகளும் இதையிட்டு கண்டிக்கவும் இல்லை. ஐ—நா சபையில் இருந்து இலங்கை அரசைக்கலைக்கவில்லை இதை ஐக்கிய நாடுகள் சபை எப்பொழுது செய்யும்?

ப:— ஐக்கிய நாடுகள் சபை எதற்கும் பயனற்ற ஒன்று. வங்கத்தில் இனப்படுகொலை நடைபெற்ற போது ஐ. நா. சபை என்ன செய்தது?

ஃ

வீ. தங்கேஸ்வரி
புதிய நகரம்

கே:— நமது உணர்ச்சிக் கவிஞர் காசி அண்ணு எப்போது விடுதலை அடைவார்?

ப:— சிங்கள அரசின் இரும்புமனம்இளகும்போது!

கே:— நமது தமிழர் கூட்டணியின் ஆறுஅம்சக்கோரிக்கையை இந்தச் சிங்களக் குடியரசு ஏற்றுக்கொள்ளுமா?

ப:— ஏற்றுக்கொள்ளாவிட்டால் நட்டம் அவர்களுக்கே! 'ஒரே இலங்கை' என்பது பழங்கதையாகி விடும். தமிழ் ஈழம் தனிக் குடியரசு நாடாகும்!

ஃ

அண்ணுமலை யோகேஸ்வரன்
கைதடி.

கே:— இலங்கையில் மக்கள் ஏன் இந்தக் காலம் கஷ்டப்படுகிறார்கள்?

ப:— 'சோசலிசம்' என்ற குழந்தையைப் பெறுவதற்கு இது பிரசவவேதனை என்கிறார்கள் ஆட்சியாளர்கள். ஆனல் குழநதை பிறக்குமுன் தாய்(பொதுமக்கள்)இறந்துவிடப்போகிறுள் என்பதை அவர்கள் உணருகிறார்கள் இல்லை. பிறக்கப்போவதும் சோசலிசக் குழந்தைதானு அல்லது இவறும் கட்டியா என்பது போகப் போகத் தான் புரியும்!

கே:— இந்தியாவில் சிலர் எம். ஜி. ஆரைப்புகழுகிறார்கள், சிலர் கருணுநிதியை புகழுகிறார்கள். இதில் உண்மைப்புகழ்ச்சி யாருக்கு உரியது.

ப:— காரணமின்றி ஒருவரைப் புகழ்ந்து கொண்டிருப்பவர்கள் சுயநலவாதிகள் அவர்களால் புகழப்படுபவனுக்கு எப்போதும் ஆபத்துத்தான். கருணுநிதியும் எம்.ஜி. ஆரும் அரசியல் பகைவர்கள் ஆவதற்கு இருவரையும் சுற்றித் துதியாடித்திரியும் சுயநலக்கும்பல்தான் காரணம்!

ஃ

ரஜபுத்திரன்
சுன்னுகம்.

கே:— யாழ்ப்பாணத்தில் குடியரசு நாளன்று ஆளுங்கட்சி அடிவருடிகள்நடத்திய ஊர்வலத்தைப் பார்த்தீர்களா?

ப:— புகைப்படத்தில் பார்த்தேன்; எல்லாம் ஒரே 'மினி'யாக காட்சியளிக்கிறதே! காட்டவேண்டியதைக் காட்டி கூட்டம் சேர்க்கப்பார்த்தார்கள் அவர்கள்; முடிவில் ஏமாற்றம்தானும்!

ஃ

யோசெப் தொக்வஸ்
ஆஸ்பத்திரி வீதி
கல்முனை

கே:— எம். ஜி. ராமச்சந்திரன் நடிப்பில்சுவைமிக்கது எது வெறுப்பது எது?

ப: வீரக்காட்சியில் அவர் நடிக்கும் போது சுவைக்கிறது—சோகக் காட்சியில் நடிக்கும் போது கசக்கிறது.

கே:— எம். ஜி. ஆர். ஓர் கராட்டிவீரனு?

ப: கராட்டி பழகியிருக்கிருரோ என்னவோ தெரியாது. ஆனல் அரசியல் [illegible] திண்டுக்கல்லில் ஜெயித்து விட்டாரே!

# தமிழர் வரலாறு புதுப்பிக்கும் சிற்பி!

— (குன்றக்குடி அடிகளார்) —



[3. 6. 73 தமிழக முதல்வர் கலைஞர் மு. க. அவர்களின் 50வது பிறந்த நாளாகும் அதையொட்டி தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வாழ்த்துக் கவிதையை இங்கு வெளியிடுகிறோம்.]

கல்தோன்றி மண்தோன் றுக்கா லத்தே
முன்தோன்றி மூத்த குடியெனப் புகழ்பூத்து
வடவேங் கடம்தென் குமரி ஆயிடை,
தாளாண் மையிலும் வேளாண் மையிலும்
தறுகண் மையிலும் தகுதி சான்ற
தமிழ்க்குடி யதனின் தகைசால் பெரும்புகழ்
பொய்யாய்ப் பழங்கதை யாய்ப்போய் விடாமல்
புதுக்கிப் பொற்புடை வரலாற் ஜேவியம்
கவினுற எழுதும் கலைஞ,நின் கொற்றம்
வாழ்கென வாழ்த்துதும், வண்டமிழ் எனவே!

ஓங்கிய கோயில் உயர்வா யிற்கடை
மணிநா நடுங்க மன்னுயிர் தழைத்திடும்
நீதி வழங்கிய நெறிமனு நீதியின்
மரபின் வழாஅது மக்களுக் கெல்லாம்
அஞ்சலென் றுெவ்வோ ரைந்தாம் நாளிலும்
குறையெலாம் கேட்டு நிறைநலம் நல்கும்
நின்றன் வடிவிற் பொன்னுர் புகழின்
மனுநீதி மன்னனைக் கண்டுவாழ்த் துதுமே!
ஒவியத் தமிழை ஒண்மைத் தமிழை
உக்கிரப் பெருவழுதி ஒருங்கிருந் தாய்ந்தே
அலமரும் உலகம் அகப்பொரு ளின்றி
அயர்ந்த பொழுது அகப்பொருள் தந்தனன்!
பயில்மொழி பரங்கி மொழியா னமையால்
அறிவியல் தமிழில் இல்லா தயர்ந்த
பொழுது பலகலை பொதுளத் தமிழிற்
பயில வழிவகை கண்டனை! நின்தமிழ்க்
கொற்றம் உக்கிரப் பெருவழு திப்புகழ்க்
கொற்றமே,எனக் குளிர்ந்துவாழ்த் துதுமே!

கொற்கைநன் முத்தெனக் கொழிதமிழ் முத்தாம்
அழிவில் புகழ்மிகு அறிவுடை நம்பி
பாண்டிய மன்னன—பைந்தமிழ்க் கவிஞன்
அவன்றன் ஆட்சிப் பெருப்புக ழதனினும்,
அவன்கவி தைப்புகழ் அருமையால் உயர்ந்தது!
இற்றைத் தமிழகக் கொற்றக் கட்டிலில்
அமர்ந்தர சாளும் பெருந்தமிழ்க் கலைஞ.
நீயும்ஓர் கவிஞன்! நின்னருங் கொற்றம்
திருத்தணி முதல்தென் குமரியீ றுக
நின்ற நிலவரைப் புடையதே யாயினும்

நின்கவிக் கொற்றமே நீளுல கனைத்தையும்
ஆட்சிசெய் கின்றது! மாட்சிமை பெற்றது!
உலகம், உலகப் பெருங்க வி யென்றே
நின்னைப் போற்றி நின்றது! அதனல்,
அறிவுடை நம்பி அருந்தோன் றல்என
நின்னை வியந்து நினைந்து வாழ்த்துதும்!
ஆழிசூழ் உலகை ஆளுமின் பத்தினும்
முத்தமிழ்த் துறைமுறை போகியோர் தம்முடன்
சிந்தை ஒன்றிச் செழுந்தமி ழாய்ந்தே

இன்பக் களிப்பில் கூட்டுணக் கொள்ளுதல்
பெரும்பே றென்றே பீடுசால் அதியமான்
அவ்வைப் பாட்டியோ டமர்ந்து மகிழ்ந்தவன்!
நின்னைச் சூழ ஆலை அதிபரும்,
அரசியல் தலைவரும், ஆளுநர் பலரும்
வளைந்து வளைந்து வந்த போழ்தினும்
நற்றமிழ் அறிஞர் கூட்டமே நாடி
வம்பெனத் திரிந்தனை! மகிழ்ந்தனை! அதனல்,
அதியமான் நெடுமான் அஞ்சியின் இயல்பை
நின்னிடம் கண்டு நினைந்துவாழ்த் துதுமே!

(3-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திண்டுக்கல் தீர்ப்பும் வி.பி. அடிக்கும் 'டூப்'பும்

திண்டுக்கல் இடைத்தேர்தல் முடிவை வைத்துக்கொண்டு திரிபுவாதி வி. பொன்னம்பலம் உளறத் தொடங்கியிருக்கிறார்.

தமிழரசார் தாங்கள் சுயமாக எதையும் செய்யாது தமிழ் நாட்டையே எதற்



கும் பின்பற்றுகிறார்கள் என்று இதுவரை ஏளனம் செய்து வந்த ஈழத்துக் கம்யூனிஸ்டுகள், இப்போது திண்டுக்கல் இடைத்தேர்தல் முடிவை இலங்கை அரசியலுடன் இணைத்து விமர்சனம் செய்ய முற்பட்டிருக்கிறார்கள்!

திண்டுக்கல்லில் அ. தி. மு. க. வெற்றி பெற்றதை தமிழர் கூட்டணி துக்கதினமாக அனுட்டித்ததாக கீழ்த்தரமான படுபொய்யை— திரிபுவாதத்தை — அவிழ்த்துவிட்டிருக்கிறார் வி. பொன்னம்பலம்.

மே 22ம் திகதி ஈழத் தமிழ்த் தேசிய இனம் துக்க தினம் அனுட்டித்தது எதற்காக என்பதை அகில உலகமும் அறியும்.

ஈழத் தமிழினத்தை கொத்தடிமைகளாக்கி அழித்தொழித்திடும் குடியரசு அரசியல் திட்டம் வந்த ஓராண்டு பூர்த்தியைத்தான் தமிழினம் துக்கநாளாக அனுட்டித்தது!

இது சிறு குழந்தைக்குக் கூடத் தெரியும்.

இதை மறைத்துவிட்டு, அ. தி. மு. க. வெற்றி பெற்றதற்காகத்தான் தமிழர் கூட்டணி துக்கம் கொண்டாடியதாக நெஞ்சாரப் பொய் கூறி யாரை ஏமாற்ற முனைகிறார் வி. பொன்னம்பலம்?

திண்டுக்கல் இடைத் தேர்தலில் தி. மு. க. தோல்வியடைந்தது தமிழர் கூட்டணிக்கும் — தமிழரசுக்கட்சிக்கும் பெருத்த அடி என்று கூறுகிறார் வி. பி.

தோழர் வி. பி. அவர்களே நீர் ரஷியாவிலிருந்து கட்டளையை எதிர்பார்த்து கட்சி நடத்துவதுபோல, தமிழ் நாட்டிலிருந்து கட்டளையை எதிர்பார்த்து கட்சி நடத்துபவர்களல்ல தமிழரசுக்கட்சியினர்!

தமிழ் நாட்டில் ஒரு இடைத்தேர்தலில் தி.மு.க. தோற்றுவிடுவதால் தமிழர் கூட்டணிக்கு இங்கு எந்த ஒரு நட்டமுமில்லை.

வேறு எந்த ஒரு நாட்டையும் எதிர்பார்த்து நாம் இங்கு தமிழினத்தின் சுதந்திரப் போராட்டத்தை நடத்தவில்லை. நம்மைகளையே நம்பியிருக்கிறோம் நாம்.

கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள்தான் ரஷியாவை நம்பியிருக்கிறீர்கள் — கையேந்தி இருக்கிறீர்கள்.

அது சரி, தி. மு. க., அ. தி. மு. க. என்று வேறுபடுத்தி பேசுகிறீர்கள் தோழரே — இரண்டும் உண்மையில் அடிப்படையில் வேறுபட்டதா?

கிடையாது!

தி. மு. க.வின் அடிப்படைச் கொள்கை எதிலும் அ. தி. மு. க. வேறுபடவோ மாறுபடவோ இல்லை.

## எஸ்ஸாரெம்

அண்ணாவின் கொள்கைகளாகிய இந்தி எதிர்ப்புக்கோ, மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கோ, தமிழ் நாட்டின் தனித்தன்மையைப் பேணுவதிலோ தி. மு. கவின் கொள்கைக்கும் அண்ணா தி. மு. க. வின் கொள்கைக்கும் வேறுபாடு இல்லை.

தி. மு. க. ஆட்சியின் நடைமுறையில்தான் ஊழலும், முறைகேடும், சர்வாதிகாரமும் இருப்பதாக அ. தி. மு. க. கூறுகிறது—அதை எதிர்க்கிறது!

பேரறிஞர் அண்ணா வகுத்துச் சென்ற கொள்கைகளையே—அண்ணா தி. மு. க. பின்பற்றும் என்று எம். ஜி. ஆர் அவர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

'இலங்கையில் தமிழினம் நசுக்கி அழிக்கப்படுவதை— கொடுமைப்படுத்தப்படுவதை—சிங்களம் தமிழர்மீது திணிக்கப்படுவதை வன்மையாக எதிர்த்தவர் பேரறிஞர் அண்ணா.

அதேபோல, அண்ணா வழிநிற்கும் மக்கள் திலகம் எம. ஜி. ஆரும் இலங்கைத் தமிழர்கள் ஈழத்துச் சிங்கள ஆட்சியால் நசுக்கப்படுவதை எதிர்த்துக் குரல் கொடுத்து வருபவர். நிச்சயம் எதிர்காலத்திலும் குரல் கொடுக்கக் கூடியவர்.

ஈழத்தமிழர்களின் தந்தை பெரியவர் செல்வா அவர்களை, அண்ணா அவர்களின் இடத்தில் — மிக உன்னத ஸ்தானத்தில் வைத்துப் போற்றுபவர் — மதிப்பவர் எம். ஜி. ஆர்.

ஈழத்துக்கு வந்ததும் ஓடோடி பெரியவரின் இல்லம் சென்று பெரியவரின் கைகளுக்கு முத்தமிட்டு மரியாதை செய்தவர், எம். ஜி. ஆர்.

'Man of Reality' என்று மனம் திறந்து பெரியவர் தந்தை செல்வாவினால் பாராட்டப்பட்டவர் எம். ஜி. ஆர்.

எம். ஜி. ஆர். அவர்களுக்கும் இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் பேரணியாம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குமிடையே சிண்டு முடிய முனைந்தால், அப்படி முனைபவர்களின் வால் நிச்சயம் ஒட்ட நறுக்கப்படும்.

பேரறிஞர் அண்ணா அவர்களையே பிற்போக்குவாதி, பிரிவினைவாதி, என்றெல்லாம் திட்டித்தீர்த்தவர்கள் அல்லவா கம்யூனிஸ்டுகளாகிய நீங்கள்.

இன்று எம். ஜி. ஆரை ஏழைகளின் நண்பன் என்று கூறுகிறீர்கள்—நாளை மறுபடியும் அவரைத் திட்டமாட்டீர்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்!

ஏன், வி. பி.யின் தோழரும், தமிழக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவருமான



இலங்கை வந்துள்ள திரு. பாலதண்டாயுதம், 'அண்ணா தி. மு. க.வும் ஓர் பூர்சுவா' [முதலாளித்துவக்] கட்சியே என்று இப்போதே மறைமுகமாக திட்டத் தொடங்கி விட்டாரே (ஆதாரம்—வீரகேசரி 28-5-73)

பாலதண்டாயுதம் 'அண்ணா தி. மு. க. ஓர் 'பூர்சுவாக் கட்சி' என்கிறார்— வி. பி.யோ ஏழைகளின் நண்பன் எம். ஜி. ஆர். என்கிறார். யாருக்கு விடுகிறீர்கள் டூப்பு?

ஈழத்துக்கம்யூனிஸ்டுகளே! நீங்கள் எப்படித்தான் 'டூப்' அடித்தாலும்— திரிபுவாதம் பேசினாலும், அ. தி. மு. க. தலைவர் எம். ஜி. ஆர். அவர்களையோ, அல்லது ஈழத்திலுள்ள அவரது ஆதரவாளர்களையோ ஏமாற்றமுடியாது! உங்கள் பக்கம் திருப்பவும் முடியாது!

ஏனெனில் பெரியவர் செல்வா குறிப்பிட்டது போல, 'எம். ஜி. ஆர். ஒரு யதார்த்தரீதியான மனிதர்.'

---

## தமிழர் வரலாறு புதுப்பிக்கும்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடுகள் பலவும் கடந்து வடபுலம்
கொண்டு வாகை சூடிய சேரன்
செங்குட் டுவன்தன் கீர்த்தியே போல
நாடுகள் பலவும் கண்டு "நலமார்
முதல்வர்" என்றே முழுதுறழ் புகழைச்
சூடி வரும்நினைச் சுடர்புகழ் பெற்ற
இற்றைச் செங்குட் டுவன்தான் என்கோ?
பத்தினித் தெய்வப் படிமம் வஞ்சியில்
அமைத்தனன் சேரன் அவன்போ லின்று
கற்பின் கனலி கண்ணகி போற்றிச்
சீர்மிகு சென்னையில் இலைய மைத்தனை!
அண்ணான் கண்ணகி சிலையமைத் திட, அவன்
இளங்கோ வண்டு இலக்கியம் செய்தான்!
இன்(று)அவ் விரண்டும் எழில்பெற நீயே
அமைத்தனை! அதனால் நின்னையா மிங்கே
செங்குட் டுவனெனச் செப்புவ தோ?இ(ல்)லை,
இளங்கோ வென்றே இயம்பிவாழ்த் துவதோ?
இருவரும் ஒன்றா யிணைந்த கோலம்நின்
உருவினில் கண்டுயாம் உவந்துவாழ்த் துதுமே!

காடுகள் வெட்டிக் கழனிக ளாக்கிப்
பீடு பெற்றனன் கரிகாற் சோழன்!
பலநூறு காணிகள் பாங்குடன் திருத்திப்
பைங்கூ ழாக்கிப் பசுமைப் புரட்சி
செய்து செந்தமிழ் மக்கள்தம் முயிரைக்
கொல்லும் பஞ்சம் கொன்றனை! அதனால்,
கரிகா லன்புகழ் நின்புக ழான
பெருமை நினைந்து வாழ்த்துதும் யாமே!

எந்தை ஈசனை இன்பத் தமிழில்
ஏத்திப் போற்றிய தின்பத் திருமிறை!
வன்கணர்—வடமொழிப் பற்றுளார் சேர்ந்துநம்
வாழ்க்கைக் கொவ்வா வடமொழி தனக்குப்
பகையென் றஞ்சிப் பைந்தமிழ்த் திருமுறை
ஏடுகள் அனைத்தையும் எடுத்துத் தில்லையில்—
மூலையில் முடக்கிச் சிறைப்ப டுத்தினர்!
அச்சிறைக் கூவம் அதனை யுடைத்துச்
செந்தாள் முக்கட் செங்கரும் புசிவம்
வேட்புறக் கேட்கும் வியன்தமிழ் மீட்டுத்
தனிப்புகழ் கொண்டனன், தமிழர்தம் இதயம்
கவர்ந்த இராச ராசன்! அவனே
போல நாளும் நலமார் தமிழோ(டு)
இசைகேட் டிடும்நல் இச்சை யுடைய
எந்தம் இறைவன் தமிழினைக் கேளா
வண்ணம் சிறைப்படுத் திடுமோர் கொடுமையை
மாற்றி 'அருச்சனை பாட்டே யாகும்'
என்ற அழகுத் தமிழ்நெறி ஏற்றுப்
புதுக்கிப் புகழ்மிகக் கொண்டனை! அதனால்,
இராச ராசனே என்றுயாம் வாழ்த்துதும்!
பண்டு சுந்தரர் என்றொரு பத்தர்
உண்(டு)அவர் உயர்ந்த பத்தியில் பைந்தமிழ்ப்

பாடல் பாடினர்! அவர்தம் பாட்டிலே
அண்ணல் நம்சிவ பெருமான் தனக்குக்
கிறுக்கும் உண்டு! கொழுதகைச் சுந்தரன்
தனக்குத் தேவைகள் பற்பல உண்டு.
அவர்தம் தேவைகள் அறிந்த அண்ணலார்
சேரமான் பெருமாள் தன்னொடும் சேர்த்து
நட்புற வாக்கி நயம்பல செய்தார்!
சேரமான் சேரநாட் டரச னாயினும்
ஆரூர ரிடத்தே அகனமர் அன்பினன்;
ஆரூரர் மகிழ அனைத்தும் அளித்தனன்
அங்ஙனே போலும் நமக்குநீ வாய்த்தனை!
பாரினில் பத்திமை வாழ்க்கை பூண்டனம்!

கண்ணுதற் கடவுள் நமக்குப் போதிய
பொன்னும் பொருளும் தந்தனன்; ஆயினும்,
தமிழ்நெறி பேணத் தகுபணி பற்பல
மேற்கொண் டனம்யாம்; மிகுந்தன; விரிந்தன!
நின்னுடைக் கொடையால் நம்பணி சிறக்க
நம்முடன் நின்னை நம்சிவன் இணைத்தான்;
சேரமான் பெருமான் என்னவே! நீயும்
நம்மை நட்டனை; நலம்செய் கின்றனை!
சீரிய செந்தமிழ்ச் சுந்தரன்—சேரமான்
பெருமான் நட்பினும் பெரிதும் விஞ்சிய
நட்பென நினைந்து வாழ்த்து கின்றனம்!
ஆரூர் தந்த அருமைச் செல்வ,
[illegible] பொற்புடைக் கலைஞ,
பழந்தமிழ்ப் பாரம்பரி யாற்றைப் புதுக்கிச்
[illegible] நின்னை
மனங்கனி கூர வாழ்த்துகின் றனமே!

## குப்பிழான் சனசமூகநிலை புதிய நிர்வாகிகள்

குப்பிழான் விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் நடப்புவருடத்தின் புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள்: திரு. ஐ. சங்கரப்பிள்ளை, திரு இ. கந்தையா, தலைவர்: திரு. வீ. பொன்னம்பலம். உபதலைவர்: திரு. மு. தர்மபாலன். செயலாளர்: திரு. வை. சிவசுப்பிரமணியம் உபசெயலாளர்: திரு. வ. சிவபாதம். பொருளாளர்: திரு. க. மனோகரன். நிர்வாகசபை அங்கத்தவர்கள்: திரு. ப. சோமசுந்தரம், திரு. சி. ஜீவராஜா, திரு. சி. ஸ்ரீஸ்கந்தராஜா, திரு. செ. தவசோதிலிங்கம், திரு. த. மூத்துலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## சிங்கள இனவெறியின் உச்சக்கட்டம்!

இந்த நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக பன்னூறு வருடங்களாக—பலதலை முறைகளாக— உழைத்து வருபவர்கள் இந்திய வம்சாவளியினரான தமிழ்த்தோட்டத்தொழிலாளர்கள்!

அவர்கள் சிந்தும் இரத்தமும் வியர்வையும்தான் இன்றும் இந்நாட்டை வாழவைத்து வருகிறது!

அவர்களது ஓயாத, சலியாத உழைப்புத்தான் இந்நாட்டுக்கு தேவையான அந்நிய செலாவணியில் 75 சதவீதத்தை பெற்றுத் தருகிறது!

அவர்களது உழைப்பு இல்லாவிட்டால் — இந்நாட்டின் பொருளாதாரம் தலைகுப்புற விழுந்து விடும்—ஆட்சிக் சக்கரம் அலங்கோலமாகி விடும் என்பது எவராலும் மறுக்க முடியாத உண்மை.

அவர்களது குடியுரிமையை—வாக்குரிமையை அநியாயச் சட்டங்களால் பறித்தெடுத்த போதிலும் — அந்த மக்கள் இந்நாட்டின் மீது தாம் கொண்ட விசுவாசத்தைக் கைவிடவில்லை.

ஓயாமல் உழைக்கிறார்கள் — ஓடாகிப்போகிறார்கள்;

அமைச்சர்களின் உலகப்பவனிகளுக்கும் உல்லாச வாழ்வுக்கும் அந்த ஏழை மக்களின் உழைப்பே முதுகெலும்பாக இருந்து வருகிறது!

உழைக்கும் அந்த உத்தமர் கூட்டத்துக்கு அரசியலுரிமை மறுக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல — அவர்களுக்கென்றுமலையகத்தில் சொந்தமாக ஒரு துண்டு நிலமில்லை—சொந்தமாக ஒரு குடிசையில்லை.

இந்நிலையில், ஆட்சியாளர்களின் ஓர் அழைப்பு அவர்களின் செவிகளில் வீழ்ந்தது—நாட்டுப்பற்று மிக்க உண்மையான உழைப்பாளிகளல்லவா அந்தப்பாட்டாளித் தமிழர்கள்!

காட்டை வெட்டிக் களனியாக்கி — உணவுற்பத்தியில் நாட்டில் தன்னிறைவு காண ஒவ்வொருவரும் சலியாது உழைத்திட வேண்டும் என்று பிரதமரும், ஏனைய அமைச்சர்களும் வேண்டுகோளுக்குமேல் வேண்டுகோள் விடுத்தார்கள்—விடுத்து வருகிறார்கள்!

ஆட்சியாளர்களின் வேண்டுகோளை ஏற்று—மலையகத்தில் உழைத்து வந்த ஏழைத் தமிழ்த்தொழிலாளர்கள் சிலர், கிழக்கு மாகாணத்தில் வந்து குடியேறத் தொடங்கினர்!

மட்டக்களப்பு பகுதியில், புனானை, வாழைச்சேனை போன்ற இடங்களில் குடியேறி காடாக கிடந்த நிலங்களை வெட்டித்திருத்தி பயிரிட்டு, உணவுற்பத்தியை பெருக்கும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

இனக் குரோதமும், வகுப்புவாதக் கண்ணோட்டமும் கொண்ட ஆட்சியாளர்களுக்கு இது பிடிக்கவில்லை.

இதை அனுமதித்தால்—மலையகத் தமிழர்களும், வடக்கு, கிழக்குத் தமிழர்களும் ஒன்றாக இணைந்து விடுவார்களே என்ற அச்சம் சிங்கள ஆட்சியாளர்களுக்கு!

எனவே, அரசாங்கக் காணிகளில் அத்து மீறிக் குடியேறியதாகக் கூறி, பயிர்ச் செய்கையிலீடுபட்டிருக்கும் இந்த தமிழர்களை அங்கிருந்து விரட்ட சட்ட நடவடிக்கையெடுத்து வருகிறது சிங்கள ஆட்சி!

இந்த மக்களை அங்கிருந்து அச்சுறுத்தியும், துன்புறுத்தியும் வெளியேற்ற சூழ்ச்சி நடக்கிறது! இதற்கென புனானையில் பொலீஸ் நிலையமொன்றும் புதிதாக திறக்கப்பட்டிருக்கிறது!

இந்திய வம்சாவளியினர் அரசாங்க காணிகளில் அத்துமீறிக் குடியேறுவது நாட்டின் 'பாதுகாப்புக்கு' ஆபத்தாக முடியுமென்றும், அதைத் தடுப்பதற்காக விசேட சட்டம் ஒன்று கொண்டு வரப்படவிருப்பதாகவும் அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது!

இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்திய வம்சாவளியினர், கிழக்கு மாகாணத்தில வெற்று நிலங்களில் குடியேறி விவசாயத்திலிடுபடுவது நாட்டின் பாதுகாப்புக்கு எப்படி ஆபத்தாக முடியும் என்பதை அரசாங்கம் விளக்கவேண்டும்! இது ஒன்றே இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்யப்பட்ட இந்திய வம்சாவளியினருக்கும், சிங்களவர்களுக்குமிடையே அரசாங்கம் பாரபட்சம் காட்டி வருவதை நிரூபிக்கப்போதுமானது என்று நாம் கருதுகிறோம்.

இதற்கு முன் திருகோணமலை போன்ற பகுதிகளில் சிங்களவர்கள் பலர் அரசாங்கக் காணிகளில் அத்துமீறிக் குடியேறிய போதெல்லாம், அவர்கள் மீது எடுக்கப்படாத சட்ட நடவடிக்கையும், கெடுபிடியும், இப்போது இந்திய வம்சாவளித் தமிழர்கள் மீது எடுக்கப்படுவது இலங்கை அரசின் சிங்கள இனவெறிக்கு தகுந்த எடுத்துக்காட்டாகும்.

இத்தனைக்கும் மேலாக — கிழக்கில் குடியேறியுள்ள அந்த ஏழைத்தமிழர்கள்—தமக்கென்று சொந்தமாக ஒரு துண்டு நிலமில்லாதவர்கள்!

நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்குவதே தமது சோசலிசக் கொள்கையென்று அரசு தம்பட்டமடிக்கிறது!

ஆனால் நிலமற்ற ஏழைகளை—அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக— குடியேறியுள்ள நிலத்திலிருந்து விரட்டியடிக்கவும், புதிதாக குடியேற விடாமல் தடுக்கவும் முனைகிறது!

'சுப்பையாவுக்கும், வெள்ளைச்சாமிக்கும் காணி கொடுக்கமாட்டோம்' என்று அன்றொரு நாள் காணியமைச்சர் கூறியதை இன்று அரசு செயற் படுத்துகிறது!

இவர்கள் தான் சோசலிச சமுதாயத்தை இந்நாட்டில் கட்டியெழுப்ப போகிறார்களாம்......தூ......!

# தமிழர்களை இரண்டாந்தர நிலைக்குத் தள்ளிவிட்டது அரசியல் சட்டம்!

### விரக்தியின் எதிரொலியே 'தனிநாடு' கோரிக்கை!

## சென்னை 'இந்து' ஏடு தலையங்கம்!

25 5.73ம் திகதிய இதழில் சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' ஏடு 'இலங்கையில் புயல் அறிகுறி' எனும் தலைப்பில் தீட்டியுள்ள தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-

'இலங்கையின் முதலாவது குடியரசு தின விழா, அமைதியான முறையில் அனுஷ்டிக்கப்பட்டதாக சொல்லப்படுகிறபோதிலும், தமிழ் சிறுபான்மை இன மக்களின் பகிஷ்கரிப்புக் காரணமாக, விழாவில் களங்கம் ஏற்படவே செய்திருக்கிறது.

இதே தினத்தில் தமிழர் கூட்டணியின் உதயசூரியன், கொடி, யாழ்ப்பாணத்தில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் வைத்து ஏற்றப்பட்டிருக்கிறது. இது தமிழ் சிறுபான்மையினர் மத்தியில் வளர்ந்துவரும் விரக்தியையும் அதனால் எழும் பிரிவினைக் கோஷம் வலுப்பெறுவதையும் எடுத்துக்காட்டுவதாயிருக்கிறது.

நாட்டின் பெரும்பான்மையினரான சிங்களப் பௌத்தர்கள் தமிழர்களை தம்மிலும் குறைந்த அந்தஸ்துள்ளவர்களாக்குவதற்கு இடைவிடாது செய்துவரும் முயற்சியின் உணர்விலேயே தமிழர் கூட்டணியின்கீழ் தமிழர்கள் இன்று இந்தக் கோஷத்தை எழுப்பி வருகிறார்கள் எனலாம்.

தமிழர்களுக்கு மேலும் உகந்த சலுகைகளைப் பெறுவதற்கு தலைவர் திரு.செல்வநாயகம் பாராளுமன்றத்தில் தமக்கிருந்த பிரதிநிதித்துவம் மூலம் எடுத்த முயற்சிகள் வெறிபிடித்த சிங்கள வகுப்புவாதிகளால் முறியடிக்கப்பட்டுவிட்டது.

திரு. டட்லி சேனநாயகா பிரதமராக இருந்தபோது, தமிழர்களுக்கு நிர்வாக சுயாட்சி அளிக்கக் கூடிய வகையில் மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவர முயன்றபோது சிங்கள வகுப்பு வெறியர்களின் எதிர்ப்பால் அது கைவிடப் படவேண்டி வந்ததை ஓர் உதாரணத்துக்கு குறிப்பிடலாம்.

இலங்கைக்கு குடியரசு அந்தஸ்தை வழங்கிய புதிய அரசியலமைப்புச் சட்டமும் தமிழர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே ஆக்கியிருக்கிறது. பௌத்த மதத்தை இலங்கையின் அரசாங்க மதத்தின் முதல் இடத்தில் வைத்திருப்பதன் மூலமும் அரசகரும மொழியாக சிங்களத்துக்கு மட்டும் அந்தஸ்து வழங்கியிருப்பதன் மூலமும் தமிழர்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக்கப் பட்டிருக்கிறார்கள்.


பெரும்பாலான தமிழர்கள், சிங்களத்துக்கும் தமிழுக்கும் சம அந்தஸ்துகோரி வந்தபொழுதிலும், பன்னெடுங்காலமாக உறுதியளிக்கப்பட்டுவரும் 'நியாயமான தமிழ் உபயோகத்துக்கு' கூட புதிய அரசியலமைப்புச் சட்டத்தில் உத்தரவாதமளிக்கப்பட்டிருக்கவில்லை.

பிரிட்டிஷ் ஆட்சியாளர் காலத்தில் மேல் ஸ்தானத்தில் இருந்துவந்த, கல்வியில் மேம்பாடுடைய யாழ்ப்பாணத் தமிழர்கள், இந்த புதிய அரசியலமைப்புச் சட்டத்தால் இரண்டாந்தரப் [illegible] பது சகித்துக் கொள்ளக் கூடிய காரியமுமல்ல.

தமிழர்களின் எதிர்ப்பு இயக்கங்கள் மீண்டும் ஒரு வகுப்புக் கலவரத்துக்கு இடமளித்துவிடக்கூடாது. எதையும் நல்ல வரம்புடன் கட்டு மீறாத வகையில் இயங்கப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சிறுபான்மையினரின் நியாயமான கோரிக்கைகளை வழங்கி, தொடர்ந்தும் ஆட்சியில் இருப்பதென்பது இலங்கையின் ஆட்சியாளருக்கு எளிதான காரியமல்லவென்பதை இலங்கையின் கடந்தகால ஆட்சியின் வரலாறுகள் எடுத்துக்காட்டியுள்ளன. அவ்வளவு தூரத்துக்கு இலங்கையின் அரசியலில் சிங்கள வகுப்புவாதம் கலந்திருக்கிறது.

எனவே தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்கக்கூடியமுறையில் அரசியல் திட்டத்தில் திருத்தம் கொண்டுவருவதற்கு முன்னர், நாட்டு மக்கள் மனதில் அவர்களின் மனப் போக்கை மாற்றவேண்டும். அதற்கான போதனைகளை சிங்களத் தலைவர்கள் முன் வந்து நடத்தவேண்டும்.




சுதந்திரன் ஆசிரியருக்கு,

நான் 12 வருடங்களாகச் சுதந்திரன் படித்து வருகிறேன். ஆனால், ஒரு தடவை கூட அதில் வரும் தலையங்கம் என்னை வருத்தத்தில் ஆழ்த்தியது கிடையாது. ஆனால் திண்டுக்கல் தேர்தல் பற்றி நீங்கள் எழுதிய தலையங்கம் என்னை மிகவும் கவலையடையச் செய்தது.

திரு. எம். ஜி. ஆர். அவர்கள் உங்கள் நண்பராக இருக்கலாம். தி. மு. க. அரசைத் திட்டுவதற்கு எப்போது சந்தர்ப்பம் வாய்க்கும் என்று காத்திருந்த மாதிரியல்லவா அவர்கள்மீது வசைபாடியிருக்கிறீர்கள்.

நான்சினிமாவைப்பார்த்து விட்டு தி மு.க. மீது பற்றுக் கொண்டவன்—அல்ல. கல்லூரியில் படிக்கும் காலத்திலும் சரி, இப்பொழுதும் சரி அண்ணாவின் நூல்களையும், கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன் போன்றவர்களின் கருத்துக்களையும், அவர்கள் தமிழுக்கும், தமிழகத்துக்கும் செய்த சேவைகளையும் படித்தும், அவதானித்தும் வருகின்றவன். எனவேதான் தி.மு.க.அரசை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

திண்டுக்கல் தேர்தலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையையும், கச்சதீவுப் பிரச்சினையையும் முன் வைத்துப் போட்டியிட்ட ஒரேயொரு கட்சி தி. மு. க. தான் என்பதை மறந்து விட்டீர்களா? அது மட்டுமல்ல, திருமதி. இந்திரா இலங்கையிலிருந்து திரும்பியதும் அவரை உடனடியாகச் சந்தித்துஇலங்கைத் தமிழர் பிரச்சினைக்காகப் போராடுவோம். அவர்கள் படும் கஷ்டங்களைப் பார்த்தும் பாராமுகமாக இருக்க மாட்டோம் என்று கூறியது கலைஞர்தானே!

— க. இளங்கோவன்
இணுவில்.

அன்புடையீர்!

தாங்கள் எழுதிய திண்டுக்கல் தீர்ப்பு என்ற தலையங்கத்தனைப் படித்தேன். பலே ஆளய்யா நீர்! காற்று எந்தப் பக்கம் பலமாக வீசுகின்றதோ அந்தப் பக்கம் சாய்வீர் போலிருக்கின்றது. அதிலும் நீங்கள் விரும்பிய திசையிலேயே காற்று வீசினால் கேட்கவா வேண்டும்? திண்டுக்கல்லைச் சாக்காக வைத்துக் கொண்டு தி.மு.க. அரசினை நன்றாகச் சாடியுள்ளீர்கள். உமக்குத் தி.மு.க. ஆட்சிமீது அப்படி என்ன கோபமோ தெரியவில்லை!

நீங்கள் தி.மு.க. பக்கமா அல்லது எம். ஜி. ஆர். பக்கமா என்று தெரிந்து கொள்ளாமல் இவ்வளவு நாட்களும் தவித்தேன். ஆனால் இப்பொழுது நீங்கள் எம்.ஜி.ஆர் கட்சிதான் என்று சந்தேகம் இல்லாமல் தெரிந்துவிட்டது.

உங்களுக்கு எம். ஜி. ஆர் மீது கொள்ளை ஆசை என்றால் அவரை மடியில் வைத்துத்தாலாட்டுப்பாடித்தூங்க வையுங்கள். எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணைகிடையாது ஆனால், அதற்காக தி.மு.க. வில் உள்ளவர்கள் மட்டுமே பண்புக்குறைவாகப் பேசுவது மாதிரியும், மற்றையவர்கள் எல்லாம் பண்பு சொட்டச் சொட்டப் பேசுவது மாதிரியும் கருத்துத் தொனிக்கும் வண்ணம்எழுத வேண்டாம்.

சுதந்திரன் பத்திரிகை தமிழ் மக்களின் கருத்தைப் பிரதிபலிக்கும் பத்திரிகை. வெளிநாட்டிலுள்ளவர்கள் அப்பத்திரிகையின் கருத்தை இலங்கைத் தமிழர்களின் கருத்தாகவே கொள்வர். தி. மு. க. ஆட்சியை என் போன்ற பல தமிழர்கள் எதிர்க்காதபோது, நீங்கள் தி.மு.க. ஆட்சியை மறைமுகமாகத் தாக்குவது முறையா?

— பி. ரவீந்திரன்,
மல்லாகம்.

## ஆசிரியர் குறிப்பு:-

'திண்டுக்கல்தீர்ப்பு' எனும் சென்ற இதழ் தலையங்கத்தில் தி.மு. கழக ஆட்சிமீது நாம் குற்றம் சுமத்தவோ அல்லது கண்டிக்கவோ இல்லையென்பதை அந்த தலையங்கத்தைமறுபடியும்வாசித்தால் இந்த வாசகர்களுக்கு புரியும் என்று நம்புகிறோம். திராவிடமுன்னேற்றக் கழகத்துக்கு அதன் துவக்க காலத்திலிருந்தே ஆதரவு கொடுத்து வந்திருப்பது இலங்கையில் சுதந்திரன் ஏடு ஒன்று மட்டுமே. எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களில் உண்மை ஏதாவது இருந்தால், அவற்றை திருத்திக்கொள்ள வேண்டுமென்று மட்டுமே கழக ஆட்சிக்கு நாம் கடந்தவாரம் அறிவுறுத்தியிருந்தோம். இதை வாசக நண்பர்கள் புரிந்து கொள்வார்களாக.

— ஆசிரியர்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையில் நடைபெற்ற குடியரசு பகிஷ்கரிப்பு நிகழ்ச்சிகள்!

## அறுபது அடி உயரக் கம்பத்தில் தமிழர்கொடி கம்பீரமாகப் பறந்தது!

தமிழர் கூட்டணியினர் மே 21ம் திகதி திருக்கோணமலையில் நடத்தவிருந்த பொதுக் கூட்டத்தை பொலீசார் தடைசெய்தனர். தடைசெய்ததைக் கண்டித்து ஓர் பிரசுரத்தை தமிழர் கூட்டணியினர் வெளியிட்டிருந்தனர். இதைக்கண்ட பின்பு 21ம் திகதி காலை 10 மணியளவில் தான் தடையை தளர்த்தினர்கள். உடனேயே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் நடத்தப்பட்டது. கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்தனர். கூட்டத்திற்கு திரு. பா. நேமிநாதன் அவர்கள் தலைமை தாங்கினர்கள். தமிழர் கூட்டணியின் திட்டங்களை எடுத்துரைத்த திரு. நேமிநாதன் அவர்கள் சென்ற முறை நாம் நடத்தியதை விட சிறப்பாக பகிஷ்கரிப்பை நடத்தவேண்டும் என்று கூறினர்கள்.

இதைத் தொடர்ந்து திரு. வில்வராஜன் அவர்களும் அடங்காத தமிழர் முன்னணியின் சார்பில் திரு. வணங்காமுடியும் திருக்கோணமலை தமிழர் கூட்டணி அமைப்புச் செயலாளர் திரு. சே. சிறீஸ்கந்தராசாவும் இளைஞர்கள் சார்பில் செல்வன் இராஜரெத்தினமும் கூட்டணியின் திட்டங்கள் பற்றி நன்கு தெளிவாக எடுத்துரைத்தனர்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன் தமிழர் கூட்டணி காரியாலயத்தை திரு. பா. நேமிநாதன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்.

22.5.73 காலை 8.45 மணியளவில் தமிழர் கூட்டணியின் உதயசூரியன்கொடியை புதிதாக திறக்கப்பட்ட அலுவலகத்தில் திரு. பா. நேமிநாதன் அவர்கள் தமிழர் கூட்டணியின் இயக்கப்பண் இசைக்கப்படும்போது ஏற்றி வைத்தார்கள். கொடிக்கம்பம் நிலத்தில் இருந்து அறுபது அடிக்கு மேற்பட்ட உயரத்தில் இருந்தது. கொடி ஏற்றும் இடத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டிருந்தனர்.

கொடி ஏற்றிவைத்ததும் 'தமிழர் கூட்டணி வாழ்க'-'தமிழ் ஈழத்தை அடைந்தே தீருவோம்' 'நமது நாடு நமதே' போன்ற கோஷங்களை எழுப்பினர்கள்.

கூட்டணியின் உதயசூரியன் பாட்ஜ் 1000 கூட்டத்திலேயே விற்றுத்தீர்க்கப்பட்டது. உதயசூரியன் கொடிக்கு நல்ல மதிப்பு திருக்கோணமலை முழுவதும் கொடுக்கப்பட்டிருந்தது.

எல்லோர் இல்லத்திலும் அரசடி-மடத்தடி வில்லூண்டி - பொலீஸ் நிலையத்தடியிலும் நகரசபை மேடைக்கு அருகிலும் உதயசூரியன் கொடி தென்னைமர உயரத்தில் கட்டி பறக்கவிடப்பட்டிருந்ததை குறிப்பாக கூறலாம்.

பாடசாலைக்கு 100க்கு 5 வீதம் மாணவர்கள்கூட செல்லவில்லை; பாடசாலையில் சிங்கள தேசிய கீதம் பாடி கொடி ஏற்றவிருந்த நிகழ்ச்சிகளும் பாடசாலை நிகழ்ச்சிகளும் மாணவ மணிகள் செல்லாத காரணத்தாலும் நிறுத்தப்பட்டது.

குடியரசு துக்கதினன்று படமாளிகைகளை பூட்டும்படி தமிழர் கூட்டணியினர் விடுத்த வேண்டுகோளை தியேட்டர் நிர்வாகிகள் மதித்து படமாளிகையையும் பூட்டி வைத்தனர்.

குடியரசு துக்கதின நிகழ்ச்சிகள் யாவும் வெற்றி பெற உதவிய திருக்கோணமலை மக்களுக்கு திருக்கோணமலை தமிழர் கூட்டணி கிளையின் சார்பில் கூட்டணியின் திருக்கோணமலை பிரசாரச் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 10ம் திகதி தமிழர் தந்தைக்கு திருக்கோணமலை இதுவரைகாணாத மாதிரி ஓர் வரவேற்புக் கொடுக்க தமிழர் கூட்டணியினரும் திருக்கோணமலை மக்களும் முடிவு செய்துள்ளனர்.

விரைவில் தமிழ் மாணவரின் 'உரிமை ஊர்வலம் ஒன்று' நடத்தப்படவுள்ளதாக மாணவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### கமலநேசன் நன்கொடை

13.5.73 அன்று நேமிநாதன் இல்லத்தில்கூட்டணியின் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தெரிவின்றியே நடைபெற்ற இக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் தெரிவின்றியே நடைபெற்ற இக்கூட்டத்தில் தற்காலிக இணைச்செயலாளர்களாக திரு. சிறிஸ்கந்தராசாவும்-திரு. மாணிக்கவாசகரும் தெரிவுசெய்யப்பட்டனர். மே மாதம் 22ந் தேதி நடவடிக்கை பற்றிச் சாரசாரமான பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. மொத்தத்தில் 'இனிப் பொறுக்கமுடியாது' எனவும்-' 'தியாகம் செய்யவும் நாங்கள் ஆயத்தம்' என்பன போன்ற ஏகோபித்த கருத்துக்கள் அங்கு நிலவின.

திரு. கமலநேசன் அவர்கள் நன்கொடையாகத் தனக்குச் சொந்தமான ஒரு இடத்தைக் கூட்டணிக் காரியாலயப் பாவிப்புக்காக வழங்குவதாகக்கூறினர். அவரது கொடை ஏற்றுக்கொள்ளப்பட்டு அவருக்கும் சபை நன்றி கூறியது.

தந்தையை வரவேற்கும் தினத்தில் தந்தையே புதிய கூட்டணிக் காரியாலயத்தைத் திறந்துவைப்பார். தமிழர் கூட்டணியின் 17ந் திகதிய எத்தமுடிவையும் ஏற்றுக்கொள்ளத் தாங்கள் ஆயத்தமாக இருப்பதாக ஏகமனதான கருத்து நிலவியது. சிறையிலுள்ள தமிழ் மறவர்களை விடுதலைசெய்யுமாறும் தீர்மானம் எடுத்த பின்னர் ஆலோசனைக் கூட்டம் முடிவுற்றது.

## நெடுங்கேணியிலும் உதயசூரியன் கொடி பறந்தது

தமிழ் மக்களின் உரிமையைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு, சிங்களமே அரசியல் மொழி, பௌத்தமே அரசியல் மதம் என்று, வெறிபிடித்த ஆட்சியினர் சட்டம் இயற்றி அச்சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்த அந்த நாள் அதுதான், சிங்கள மக்களின் குடியரசு நாள் தமிழ் மக்களின் குடிகெடுத்த நாள். ஆமாம் அந்த நாள் வந்து ஓராண்டு முடிந்து மீண்டும் அதே நாள் வந்துள்ளது— அன்று நெடுங்கேணியிலுள்ள இளம் சிங்கங்கள் காலையிலே ஒன்று திரண்டனர்.

தமிழ்க் கூட்டணியின் தேசிய கீதம் முழங்கப் பட்டப்பகலிலே பிரதான வீதியிலே தமிழர் கூட்டணியின் உதயசூரியன் கொடியை ஏற்றினர்—தொடர்ந்து வீதியெங்கும் உதயசூரியன் கொடிகள், தமிழ் மக்களின் வாழ்க்கையிலே உதயசூரியன் உதிக்கப் போகின்றான் என்றுணர்ணும்படி காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தன. உதயசூரியனை கொடி ஏற்றியதுடன் எங்கள் கடமை முடிந்து விடவில்லை. உரிமை பெறும் வரை தொடர்ந்து போராட இன்றே நாம் தயார் என்று உரத்து முழக்கமிட்டனர்.

இலங்கை குடியரசான 1972ம் ஆண்டு மே இருபத்திரண்டாம் திகதி எழுதப்பட்ட 'நாட்டில் நீதியில்லை வீட்டில் சீனியில்லை நமக்கேன் குடியரசு' ஈழத்தமிழனே ஒன்று சேர்ந்திடு உரிமை பெற்றிடு என்ற வாக்கியங்கள் இன்று வரை அழியாமல் சிதையாமல் காட்சிகொடுத்துக்கொண்டிருக்கின்றன.

தண்ணீரூற்று, முள்ளியவளை ஆகிய இடங்களிலும் உதயசூரியன் கொடிகள் பறந்துகொண்டிருந்தன. இடைக்கிடை கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

நெடுங்கேணியில் அரசினரால் இளைஞர்களுக்கு விவசாய அபிவிருத்தித்திட்டத்தில் கொடுக்கப்பட்ட வாழைத்தோட்டத்து முகப்பிலும் பென்னம்பெரிய கறுப்புக்கொடி ஒன்று கட்டப்பட்டிருந்தது. அநேக மாணவர்களின் வீடுகளிலும் உதயசூரியன் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

நெடுங்கேணியில் காரியதரிசி அலுவலகம்— கிராமசபை அலுவலகம் மற்றும் எந்த ஒரு அலுவலகத்திலும் குடியரசுதினம் கொண்டாடப்படவில்லை. பாடசாலையிலிருந்து எந்த ஒரு மாணவ மாணவிகளும் குடியரசுக் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளவில்லை. வீதியிலே இளைஞர்கள் கொடியேற்றிக் கொண்டிருக்கும் போது பல பெரியோர்கள் இளைஞர்களுக்கு உற்சாகமூட்டினர்.

நெடுங்கேணியைப் பொறுத்தவரை போராட்டத்துக்கு இன்றே தயாராகிவிட்டது. இளைஞர்கள் உயிரை மதிக்கவில்லை — உரிமையைத்தான் மதிக்கின்றார்கள்.

—நம்பி

## உயிர் துறப்பேன்

மு. அப்துல் கரீம்

காலத்தால் அழியா எங்கள்
காவியத் தமிழை, இந்த
ஞாலத்தில் வாழ வைத்தே
நானுயிர் துறப்பேன் என்னை
மீளாத சிறையில் தள்ளி
மிதித்தே வதைத்திட்டாலும்
கோல நற்றமிழை என்றும்
கூவியே உயிர் துறப்பேன்

கட்டாகளை குத்தி என்னை
கல்லறை சமைத்திட்டாலும்
பொன்தமிழ் உலகில் வாழ
போர்க்கொடி உயர்த்திச்சாவேன்
வண்டமிழ் மொழியை எங்கள்
வாழ்க்கையின் ஊன்றுகோலாய்
வான்புகழ் வாழ வைத்தே
வையத்தில் உயிர் துறப்பேன்

செங்குருதி இந்த நாட்டைச்
சிகப்பாகச் செய்திட்டாலும்
தங்கத் தமிழை நாட்டில்
தரமுடனே வாழவைப்பேன்
பங்கங்கள் தந்து எம்மை
பாவிகள் அழித்திட்டாலும்
மங்காத் தமிழை எந்தன்
மார்போடணைத்துச் சாவேன்

●

## சூடும் மலர் மாலை....

திருமதி. எம். வர்ணகுல நாதன்

தென்னு தமிழ் மணக்கும் தெய்வீக மூதூர் தம்
உள்ளத்திருந்து ஒரு கவிதை பெய்கிறது......
அள்ளிப்பருகும் அமுதத்தமிழ்க் கடலும்
கின்னைத் தமிழ்க் காற்றும் கிளுகிளுப்பை மூட்டுகையில்
பள்ளும் பிறக்காதோ? பாட்டாறு ஓடாதோ?
வெள்ளைக்கலையணிந்த வேணிதுணை செய்யாளோ?!!
சொல்லேருழவர்களும் சொந்தம் கொண்டாடுகையில்
வெல்லுக் தமிழ் வாயில் வெல்லம் போலூருதோ?

பாடும் தமிழே, பைந்தமிழே, வண்டமிழே
ஆடும் தமிழே அன்றிருந்து இன்று வரை
வாடும் தமிழே, உன்வண்ண முகங்கண்டெனது
நாடும் எழுகிறது, நல்லோர் கொதித்தெழுந்தார்;
பீடும் பிடித்துப் பெருமை, அருமை குன்றித்
தேடும் பட[illegible]
கூடும் தமிழர்களே! [illegible] என்காப்க்கு
சூடும் மலர்மாலை [illegible]

## 'பக்த நந்தனார்'

### கொழும்பில் மேடையேறுகிறார்!

மெய்ஞானம் வேண்டி நிற்கும் சைவப்பெருமக்களின் பெருநாளைய ஆசை நிறைவேறுகிறது. சமய நாடகங்கள் மேடையேறுதா என்ற ஏக்கத்தைதப்போக்க, கலைஞர் சின்னையா பாவநாசிவம் முன்வந்திருக்கிறார்.

யாழ்நகர், மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை, பண்டாரவளை, கொழும்பு ஆகிய இலங்கையின் பல பாகங்களிலும் தொளாயிரத்துத்தொண்ணூற்று ஒன்பது தடவைகள் மேடையேறி, பல ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று; வானொலியிலும் ஒலிபரப்பாகி பல நேயர்கள் மீண்டும் ஒலிபரப்பாகாதா என்று ஆவலுடன் எதிர்பார்த்த, நடிகமணி வி. வி. வைரமுத்து குழுவினரின் 'பக்த நந்தனார்' இசை நாடகம் 1000வது தடவையாக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் — 3-6-73 ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மேடை யேறுகிறது.

கலைஞர் சின்னையா பாவநாசிவம் ஏற்கெனவே மயானகாண்டம் நாடகத்தைச் சென்றவருடம் கொழும்பு மாநகரில் மேடையேற்றி பெரும் புகழைசம்பாதித்துக் கொண்டார். தொடர்ந்தும் அவர் இப்பணியில் ஈடுபடுவது கொழும்பு ரசிகர்களின் மனதிற்கு ஆறுதல் கொடுக்கின்றது.

நமது பாரம்பரிய கலைகளை வளர்க்கும் பணியில் நடிகமணி, வி. வி. வைரமுத்து முன்னணியில் நிற்கிறார். அவரின் நாடகங்களை நவீன யுக்திகளுடன் இயக்கி கொழும்புரசிகர்களின் திருப்திக்கேற்பக் நெறிப்படுத்த திரு. கே. எம். வாசகர் முன்வந்திருப்பது நாடக வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சியை வெகு சீக்கிரம் எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

கோபாலகிருஷ்ணபாரதியாரின் பாடல்கள் அடங்கிய பக்தநந்தனில் இருபதுக்கு மேற்பட்ட காதுக்கினிய பாடல்களும், மெய் சிலிர்க்க வைத்து, பக்திபரவச மூட்டும் நடிப்பும், மெய்மறந்து ஆண்டவன் அருள்வேண்டி நிற்க வைக்கும் காட்சி அமைப்புக்களும் கொண்ட இந்நாடகம் பல்லாயிரம் ரூபா செலவில் தயாராகிறது.

இந்நாடகத்தைகொழும்பு ரசிகர்கள் ஒரு முறை மட்டும் பார்த்தால் போதும்; பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று கூறும் சின்னையா பாவநாசிவத்தின் முயற்சிக்கு ஆதரவுகொடுக்கவேண்டியது சைவப்பெருமக்களின் கடமையாகும்.

— வண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்மொழிச்சட்டம் தமிழுக்கு என்னசெய்தது?

## 45 இல் 33 பொலிசு நிலையங்களில் தமிழுக்கு இடம் இல்லை

### ஒரு மாதத்தில் 3,350 தமிழர் சிங்கள வாக்கு மூலங்களுக்குக் கைபொப்பமிட்டனர்

கா. பொ. இரத்தினம் பா. உ.

தமிழ் மக்களுக்குத் தமிழ் மொழி உரிமை கொடுப்ப தற்காக நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற் பாடுகள் சட்டம் 1958 இல் நிறை வேற்றப்பட்டது. பதி ஞன்கு ஆண்டுகளுக்குப் பின் 1972 இல் அதனுல் தமிழ் மக்கள் அடைந்துள்ள பலன் கள் என்ன? உயிரற்ற பிண மாக்கப்பட்ட அச் சட்டத் தைக் காட்டி எவ்வளவு காலம் தமிழ் மக்களை ஏமாற்ற அரசாங்கம் முயலப் போகிறது! ஏமாற்று வித் தைக்கும், அநீதிக்கும், சிங் கள மொழித் திணிப்புக்கும் ஒரு முடிவு எப்பொழுது ஏற் படப் போகின்றது?

**தமிழ்ப் பகுதியில் தனிச் சிங்கள ஆட்சியா?**

தமிழ்ப் பகுதியிலுள்ள பொலிசு நிலையங்களில் பெரும்பாலும் சிங்களத்தி லேயே வாக்குமூலங்கள் பதி யப்படுகின்றன என்பதும் தமிழ் தெரியாத சிங்களப் பொலிசாரே தொகையாக நியமிக்கப்படுகின்றனர் என் பதும் தமிழ் மக்கள் யாவருக் கும் தெரிந்த விடயங்கள். இவை அரசாங்கம் வேண்டு மென்றே செய்யும் துரோ கங்கள்! இதனை புட்டுக் காட்டி நிலைமையை உலகம் அறியச் செய்வதற்காக நான் பிரதம அமைச்சரிடம் பின்வரும் இரண்டு வினுக் களைக் கேட்டேன்.

1. வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலுள்ள பொலிசு நிலையங்கள் ஒவ்வொன்றி லும் கடமையாற்றும் பொலி சுக்காரரிலும் பொலிசு உத்தி யோகத்தரிலும்:

(அ) 1. சிங்களவர், 2. தமிழர் 3. முஸ்லிம்கள் எத் தனைபேர் என்பதையும்;

(ஆ) இந்நிலையங்கள் ஒவ் வொன்றிலுமுள்ள பொலி சுப்படையினரில் தமிழில் வாக்குமூலங்களை பதியத் தக்க அறிவுடையவர்கள் எத்தனைபேர் என்பதையும் தமிழில் வாக்குமூலங்களை எழுத முடியாதவர்கள் எத் தனைபேர் என்பதையும்;

(இ) இந்நிலையங்கள் ஒவ் வொன்றிலும் பொலிசுக் கடமையாற்றும் தமிழர் களில் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை ஒன்றிலேனும் சித் தியடைந்தவர்கள் எத்தனை பேர் ஒன்றிலேனும் சித்திய டைந்தவர்கள் எத்தனைபேர் என்பதையும்.

(ஈ) சிங்களவர்களில் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சை ஒன்றிலேனும் சித்தியடைந் தவர்கள் எத்தனைபேர் என் பதையும் அவர் கூறுவாரா?

2. வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலுள்ள பொலிசு நிலையங்கள் ஒவ்வொன்றி லும் 1972 யூன் மாதம் முழு வதும் பதியப்பட்ட வாக்கு மூலங்கள்;

(அ) 1. சிங்களத்தில் 2. தமிழில் 3. ஆங்கிலத்தில் பதியப்பட்ட வாக்குமூலங் கள் எத்தனை என்பதையும்.

(ஆ) சிங்களத்தில் பதியப் பட்ட வாக்குமூலங்களில் எத்தனை வாக்குமூலங்கள் தமிழர்களால் கொடுக்கப் பட்டவை என்பதையும்.

(இ) இந்த வாக்குமூலங் களைக் கொடுத்தவர்களில் எத்தனைபேர் 1. சிங்களத்தி லும் 2. தமிழிலும் 3 ஆங்கி லத்திலும் தங்கள் வாக்கு மூலங்களுக்குக் கையொப்ப மிட்டுள்ளவர் என்பதையும்.

(ஈ) ஆங்கிலத்தில் பதியப் பட்ட வாக்குமூலங்களில் எத்தனை வாக்குமூலங்கள்;

1. சிங்களவர்களாலும் 2. தமிழர்களாலும் கொடுக் கப்பட்டவை என்பதையும் அவர் கூறுவாரா?

**வடக்கில் சிங்களத்தில் 2190 தமிழில் 258**

இந்தக்கேள்விக்குத் தேசிய அரசுப் பேரவையில் 9—2—73 இல் மறுமொழி கொடுக்கப்பட்டது. இந்த மறுமொழி 9—2—73 'அஞ் சாட்டில்' உளது. வடமாகா ணத்தின் உள்ள 22 பொலிசு நிலையங்களில் 1972 யூன் மாதம் முழுவதும் கொடுக் கப்பட்ட வாக்குமூலங்களின் மொத்தம் 4247. இவற்றுள் சிங்களத்தில் பதியப்பட்ட வை 2190 வாக்குமூலங்கள். தமிழில் பதியப்பட்டவை 258 வாக்குமூலங்கள் மட்டு மே. ஆங்கிலத்தில் பதியப் பட்டவை 1799 வாக்கு மூலங்கள்.

தமிழர் கொடுத்த 1932 வாக்குமூலங்கள் சிங்களத் தில் பதியப்பட்டுள்ளது. மொத்த வாக்குமூலங்களில் 2915 வாக்குமூலங்கள் தமிழில் கையொப்பமிடப் பட்டுள்ளது.

**பதினெரு நிலையங்களில் தமிழ் இல்லை**

காங்கேசன்துறைப் பொலிசு நிலையத்திலும் ஊர் காவற்றுறைப் பொலிசு நிலையத்திலும் மட்டுமே சிங் களத்தில் பதியப்பட்ட வாக்குமூலங்களிலும் தமிழில் கூடிய தொகையான வாக்கு மூலங்கள் பதியப்பட்டுளன; ஏனைய இருபது பொலிசு நிலையங்களிலும் சிங்களத் திலேதான் கூடிய தொகை யான வாக்குமூலங்கள் பதி யப்பட்டுள்ள. யாழ்ப்பாணப் பொலிசு நிலையத்தில் 107 சிங் களத்திலும் 315 ஆங்கிலத்திலும் பதியப்பட்டன. தமிழில் ஒன்று மில்லை. சுன்னுகம், பருத்தித் துறை, அச்சுவேலி, வல்வெட் டித்துறை, யாழ்ப்பாணம், நெடுந்தீவு, நல்லூர், முல்லைத் தீவு, மாங்குளம், தலைமன்னர், வவுனியா எனும் பதினெரு பொலிசு நிலையங்களில் தமிழில் ஒரு வாக்குமூலந்தானும் பதியப் படவில்லை.

**கிழக்கில் சிங்களத்தில் 2349 தமிழில் 89**

கிழக்கு மாகாணத்தி லுள்ள 23 பொலிசு நிலையங் களில் 1972 யூன் மாதத்தில் பதியப்பட்ட வாக்குமூலங் களின் மொத்தம் 3847. இவற்றுள்ள 2349 சிங்களத் திலும் 89 தமிழிலும் 1409 ஆங்கிலத்திலும் பதியப்பட் டுள்ளன.

தமிழர் கொடுத்த 1418 வாக்குமூலங்கள் சிங்களத் திலே பதியப்பட்டன. மொத்த வாக்குமூலங்களில் 2127 வாக்குமூலங்கள் தமி ழில் கையொப்பமிடப்பட் டுள்ளன.

**இருபத்தொரு பொலிசு நிலையங்களில் தமிழ் இல்லை**

கஞ்வாஞ்சிக்குடி பொலிசு நிலையத்தில் மட்டுமே சிங்க ளத்திலும் தமிழில் கூடிய தொகையான வாக்குமூலங் கள் பதியப்பட்டுள. மட்டக் களப்புப் பொலிசு நிலையத் தில் 265 சிங்களத்திலும், 17 தமிழிலும், 125 ஆங் கிலத்திலும் பதியப்பட்டுள.

இருபத்தொரு பொலிசு நிலையங்களில் தமிழில் ஒரு வாக்குமூலமேனும் பதியப் படவில்லை.

**வடக்கில் சிங்களவர் 479 தமிழர் 234**

வட மாகாணத்திலுள்ள 22 பொலிசு நிலையங்களில் உள்ள பொலிசுக்காரரில் சிங்களவர் 479 பேர், தமி ழர் 234 பேர், முஸ்லிம்கள் 36 பேர். இந்த 36 பேரில் 21 பேர் தமிழில் வாக்கு மூலங்கள் எழுதமுடியாதவர் கள்.

ஊர்காவற்றுறைப் பொலிசு நிலையத்தில் மட் டுமே சிங்களவரிலும் கூடிய தமிழர் கடமை புரிந்தனர். ஏனைய 21 பொலிசு நிலையங் களிலும் தமிழர்களிலும் சிங் களவரே கூடிய தொகை யினராவார்.

**கிழக்கில் சிங்களவர் 445 தமிழர் 112**

கிழக்கு மாகாணத்தின் 23 பொலிசு நிலையங்களில உள்ள பொலிசாரில் சிங்கள வர் 445 பேர். தமிழர் 112 பேர் முசிலிம்கள் 33 பேர். இவர்களில் ஒரு தமிழரும் 10 முசிலிம்களும் தமிழில் வாக்குமூலங்களைப் பதிய முடியாதவர்கள்.

கஞ்வாஞ்சிக்குடிப் பொலிசு நிலையங்களிலும் தமிழரிலும் சிங்களவரே கூடிய தொகையினா.

யாழ்ப்பாணப் பொலிசு நிலையத்தில் சிங்களவர் 125, தமிழா 55, முசிலிம்கள் 14. மட்டக்களப்புப் பொலிசு நிலையத்தில் சிங்களவர் 87, தமிழர் 23, முசிலிம்கள் 2.



## கிராமசபையிலும் உதயசூரியன்

மாங்குளம், பனங்காமம், நெட்டாங்கண்டல் கிராம சபைக் கட்டிடத்தில் குடி யரசு தினத்தன்று தமிழர் கூட்டணியினரின் உதயசூரி யன் கொடி பறக்கவிடப்பட் டது. இக்கிராம சபை மூன்று அங்கத்தவர்களுடன் தற்சமயம் இயங்கிக்கொண் டிருப்பதுகுறிப்பிடத்தக்கது. [illegible] ஆம் உதயசூரியன் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

## அழாமல் அழுதார் ஆ. தியாகராசா!

'காரை நகர் மக்கள் நன்றி கெட்டவர்கள். எனது உதவியால் ஜே. பி. பட்டம் பெற்றவர்கள் கூட என்னைக் கைவிட்டுவிட்டார் களே' என்று 22-5-73ல் காரை இந்துக்கல்லூரியில் நடந்த சுதந்திரதின விழா வில் அழாமல் அழுதுவிட் டார்; காரை ஆ. தியாக ராஜா எம். பி.

மேலும் அவர் தமக்குத் துவக்குச் சூடு என்று கேள் விப்பட்டு எனது ஊரவர் களும், உறவினரும் மாத்திர மல்ல எனக்கு பெண் தந்த மைத்துனன் கூட என்னை வந்து பார்க்கவில்லையே என்று வருத்தப்பட்டார்.

'கிராம சபைத்தலைவரை யும் அங்கத்தவர்களையும் இங்கு காணவில்லையே கிரா மச் சங்கம் தவருன வழியிற் செல்கிறது. அதற்கு நான் பொறுப்பில்லை' என்றும் கூறிவிட்டார். தமது எதிரி யும், அல்ல நண்பரும் ஆகிய அமிர்தலிங்கம் கூட தனது முயற்சியால் தமிழில் வழக் காடுகிருர் ஆனல் தோல்வி கண்டவழக்குகள்தான் அதி கம் என்று ஆறுதல் பட் டார்.

முன்புதான் இம்மண்ட பத்தில் நடத்திய கருத்தரங் கில் நீர் அரசியல் சட்டம் படித்துத்தான் வந்திருக் கிறீர்களோ என்று சிலவாலி பர்கள் கேட்டார்கள். ஆனல் நான் இப்போது நன் ருகப் படித்து வந்திருக் கிறேன். ஆனல் அவர்களைக் காணவில்லை என்று பெரு மைப்பட்டார்.

தேர்தலில் ஆதரித்து, வெற்றியின் பின் சடுமை யாக எதிர்த்து பல அறிக்கை கள் விட்டவர் ஒருவர் பேசும் போது எம். பி. வீட் டுப் படலையில் நிற்பவர்களில் நூறில் ஒரு பங்கினரைக் கூட இக்கூட்டத்தில் காண வில்லையே என்ருர்.

கூட்ட ஆரம்பத்தில் சங் கானையிலிருந்து மூன்று லொறி ஆட்களைக்கொண்டு வந்து கூட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அவர்கள் படம் எடுத்தவுடன் திரும்பிவிட்ட னர். கூட்டத்தில் காரை மக் கள் சுமார் நாற்பது பேர் வரைதான் இருந்தனர். வெளியில் (ரோட்டிலும், கடைவாயில்களிலும்) அறு பதுக்கு மேற்பட்ட இளைஞர் கள் நின்றனர்.

சமீபத்தில் நடந்த அவரது பிறந்த தின விழாவிலும் காரை நகர் மக்கள் முப்பது பேர் வரைதான் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

—நிருபர்.

## சமவுரிமைக்குரல் செய்வோம்

— மருதூர் வாணன்

தமிழ் பேசுமினங்கள் விடுதலை பெறவேண்டி
தட்டிக் குரல் கொடுக்கு மெங்கள்
அமிழ் தானசெயல் வீரன் திருவாளர்
அமிர்த லிங்கம் ஐயாவைப் போற்றுகிறேன்.

எல்லாளன் ஆண்டிருந்த ஈழகமே
எந்தமிழர் கலைவளர்த்த எழில்நாடே
சொல்லாளன் செயலாளன் பலதலைகள்
சொரிந்து விட்ட தமிழரசுக் கட்சியிலே
நல்லாளன் அமிர்த லிங்கம் ஐயாவை
நமது கட்சித் தலையாகத் தெரிந்தமைக்கு
வல்லாளன் தமிழ்க் குலங்கள் யாவரையும்
வரவேற்று வாழ்த்துகிறேன் வாழ்க வாழ்க.

இனிமேலும் பொறுமையுண்டோ, மாற்ருர்க்கு
யாமடிமைகளோ?
இனியதமிழ் அயலான்கால் மிதிபட யாமென்ன
மடையர்களோ
இன்றேயாம் புறப்படுவோம் புதியதலைப் போரணிக்கு
விறுடனே
இனிமேலுந் தயங்காதே தமிழா நீ சமவுரிமைக்குரல்
செய்வோம்

## கொட்டுக முரசே!

(புலவர் தகடூர் பாவாணன்)

கொட்டுக முரசே! கொட்டுக முரசே!
கெடுதலை விளைக்கும் கேடரைத் திருத்த

எட்டுத் திக்கும் எழுச்சி பெறவே
எட்டப் பர்கள் ஓடி மறைய கொட்டுக......

அன்னைத் தமிழை அழித்திட நினைக்கும்
அற்பர் எண்ணம் அனைத்தும் வீழ,
அண்ணல் காந்தியின் அன்பு வழியில்
அறப்போர் நடத்தி, ஆணவம் அழிக்க கொட்டுக...

இன்னல் ஆயிரம் எழுந்தே வரினும்
இனிமைத் தமிழுக்கு உயிரையும் கொடுக்க,
தன்னலம் இல்லாத் தமிழ்மற வர்கள்
தாவி எழுந்து கடலெனப் பாய கொட்டுக...

அடக்கு முறையில் ஒடுக்க நினைக்கும்
அறியா தோர்க்கு அறிவினைப் புகட்ட,
இடக்கு செய்தே ஏமாற்று கின்ற
எத்தர்கள் உணர்ந்து எங்கோ ஒளிய கொட்டுக...

தமிழனுக் கென்றும் தோல்வி இல்லை
தயங்காதே நீதான் அறிவின் எல்லை
இனிலே தெனவே எழுச்சி பெற்று
அமைதியை எங்கும் அமைக்க என்றே கொட்டுக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆளுக்காள் மோதிக் கொண்டனர்!

## குமாரசூரியருக்குச் சுடச் சுடக் கொடுத்தார் ஜனுப் அசீஸ்!

## மலையக எழுத்தாளர் மன்றக் கூட்டத்தில் தபாலமைச்சருக்கு ஏற்பட்ட தலைகுனிவு!

மலையக எழுத்தாளர் மன்றத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா அட்டன் புனித பொஸ்கஸ் கல்லூரியில் 27ந் திகதி நடைபெற்றது. எழுத்தாளர்களின் கூட்டம் காலையும் தூரத்துப்பச்சை நாவல் அறிமுக விழா, கலை விழா மாலையும் நடைபெற்றது.

கூட்டத்திற்கு தபாலமைச்சர் திரு. குமாரசூரியரும் அவர் மனைவியாரும் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

மந்திரி குமாரசூரியர் நுவரெலியா தேர்தலில் ஐ. தே. கட்சிக்கு மலையக மக்கள் வாக்களித்து வெற்றிபெறச் செய்ததை மனதில்வைத்துப் பேசினார். அவர் தனது பேச்சில், "தொழிற் சங்கங்கள் இருக்கவேண்டியதில்லை. அரசியல் இயக்கங்களில்சேர்ந்து உரிமைகளைக் கேளுங்கள். தொழிற் சங்கம் புரோக்கர் போலறு விளங்குகின்றது. கங்காணி, தலைவர், தொழிற் சங்கம் மலையக மக்களை ஆட்டிப் படைக்கும் கருவிகள். நுவரெலியாத தேர்தலில் ஐ. மு. அரசுத் தலைவர்கள் தொழிற் சங்கத்தையும் தலைவர்களையும் நம்பினர். தலைவர்கள் ஐ. மு. அரசுக்குத் தலையில் அள்ளிவைத்தார்கள். நீங்கள் மன்னர்கள். உங்களை எவரும் ஒதுக்க முடியாது. அரசியலில் நேரடியாக பங்கு கொள்ளுங்கள" என்று குறிப்பிட்டார்.

இப்படிப் பேசும் போது ஐ. தொ. கா. தலைவர் ஜனுப் ஏ. அஸீசும் மேடையில் இருந்தார்.

இன்னொரு கருத்தையும் குமாரசூரியர் தப்பித் தவறிக் கூறினார்.

"மலையக மக்களுக்கு நாட்டுப்பற்று வேண்டும். மலையக மக்கள் உடல் இங்கு — ஆவி இந்தியாவில். இங்குள்ள மலையக மக்கள் இராமநாதபுரத்தையும், மதுரையையும் பற்றித்தான் சிந்திக்கின்றார்கள்."

என்றும் ஏதோ உளறி வைத்தார்.

அமைச்சரை அடுத்துப் ஐ. தொ. காங்கிரஸ் தலைவர் ஜனுப் ஏ. அஸீஸ் பேசும் போது அமைச்சரின் பேச்சைக் காரசாரமாகக் கண்டித்தார். அமைச்சரின் பேச்சுக்கு தமது கண்டனம் என்ற சவுக்கினால் சுளீர் சுளீர் என்று பதிலடி கொடுத்தார். அமைச்சருக்குப் பொறுக்க முடியவில்லை. அஸீஸின் பேச்சுக்கிடையே துள்ளிக் குதித்தெழுந்து பதில் கூறினார். அரசியல் அதிர் வெடியினால் மக்கள் திகைத்துப் போயிருந்தனர். அசீசின் பதிலுக்கு மண்டபம் நிறைந்திருந்த மக்கள் கைகொட்டி, கரகோசம் செய்து அடிக்கடி உற்சாகப்படுத்தினர்.

சில நிமிடங்களாக இருவருக்குமிடையில் ஏற்பட்ட லடாய் பெரிதாகி மாநாடு குழப்பத்தில் முடியுமோ என்று எண்ணவேண்டியுமிருந்தது. அன்றைய கூட்டத்தில் திரு. இர. சிவலிங்கம், தமிழ் நாடு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பால தண்டாயுதம் என்போரும் இருந்தவர். மந்திரி குமாரசூரியருக்கும் அசீஸ் சிற்குமிடையில் நடந்த உறைப்பான விவாதம் இதுதான்.

மந்திரி குமாரசூரியருக்குப் பதில் கொடுப்பதற்காக ஜனுப் அசீஸ் தமது பேச்சைத் திசை திருப்பி அவர் குறிப்பிட்டதாவது.

"தொழிற் சங்கம் மாத்திரம் எதையும் செய்ய மாட்டாதுதான். ஆனால் மலைநாட்டில்வாழும் தொழிலாளருக்குத் தொழிற்சங்கங்கள்தான் தன்னம்பிக்கையையும் போராடும் தன்மையையும் ஏற்படுத்தியது. 'தூரத்துப் பச்சை மோசம் என்றீர்கள். கிட்டத்துப் பச்சை மிக மோசம் என்பது அமைச்சருக்குத் தெரியுமா' என்று தமிழில் கேட்டார்.

அஸீஸ் தமது பேச்சை ஆங்கிலத்திலேயே நிகழ்த்தினரென்பது குறிப்பிடத்தக்கது.

'தொழிற்சங்கத்திலிருந்து விலகியிருக்குமாறு நீங்கள் மலையக மக்களைக் கேட்கலாம். ஆனால் தோட்டத் தொழிலாளர் அரை பட்டினி கிடப்பதை நீங்கள் உணரவில்லை. பாராளுமன்றத்தில் இவர்கள் பற்றி எவரும் மூச்சுவிடாமல் இருக்கிறீர்கள்.'

இந்த நேரத்தில் அமைச்சர் குமாரசூரியர் குறுக்கிட்டார். 'ஸ்ரீமா பண்டாரநாயக்காதான் பிரசா உரிமை வழங்கினார்' என்று கூறினார்.

உடனே அஸீஸ் தமிழில் 'தோழர் அமைச்சர் அவசரப்படக்கூடாது' என்றார். நான் அரசு செய்யும் நன்மைகளையும் சொல்லப் போகின்றேன்' என்றார்.

குமாரசூரியர் எதுவும்பேசவில்லை. இந்த நேரத்தில் அஸீசின் பேச்சை மக்கள் கரகோசம் செய்து வரவேற்றனர்.

தோட்டத் தொழிலாளரின் சம்பள விஷயமாக பாராளுமன்றத்தில் எவரும் பேசுவதில்லை. சபையை அவர் நோக்கி, உங்களுக்கும், மந்திரிக்கும் சொல்கிறேன். தான் சம்பள விஷயமாகப் பேசும்போது ஏனைய உறுப்பினர்கள் எதுவும் பேசுவதில்லை. வாயைத் திறக்கிறீர்கள் இல்லை. நான் பாராளுமன்றத்தில் பேசும் போது (அமைச்சரைப் பார்த்து) நீங்கள் அங்கு இருப்பதில்லை.

'இங்குள்ள மலையகத் தமிழர் இந்தியாவில் பற்றுள்ளது பற்றியும் குறிப்பிட்டீர்கள். அதில் தவறில்லை. நான் இந்தியன் இங்கு வந்தபின் தான் பிரசா உரிமை கிடைத்தது. அப்படியானால் அங்குள்ள உறவினர்களைப் பற்றிச் சிந்திப்பதில் என்ன தவறு. நான் புரியாணியில் பற்றுவைப்பது எப்படித் தவறில்லையோ அப்படித்தான் இங்குள்ள இந்தியத் தமிழர் இந்தியாவில் பற்றுவைப்பதும் என்று புரியவைத்த

அஸீஸ் தொடர்ந்து குமாரசூரியருக்குக் குறிப்பிட்டதாவது:-

'தொழிற்சங்கங்கள் அனைத்தும் அரசியல் கட்சிகளுடன் தொடர்புவைக்க வேண்டுமென்றுவேண்டினால் நிட்சயம் அதனைச் செய்வோம்.

'ஆனால் தொழிற்சங்கங்கள் மக்களுக்கு உதவாது அதனை ஒழித்துக்கட்டுங்கள் என்றால் அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் அக்கருத்து நீதியற்றது. நியாயமற்றது என்று வன்மையாக எடுத்துக்கூறுகின்றேன்.

'மக்கள் தமது குறைகளைத் தொழிற்சங்கத்துக்கூடாக வந்து சொல்லுங்கள். தீர்க்கிறோம். அமைச்சரிடமோ வேறு எவரிடமோ போக வேண்டியதில்லை. என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

அஸீஸ் பேசியபின் தலைவர் பின்வருமாறு குறிப்பிட்டார். 'எழுத்தாளர் வளர்ச்சிக்கு ஆலோசனை சொல்ல வேண்டிய மேடையில் அரசியல் அதிர்வெடியைக் கேட்கும் துர்ப்பாக்கியம் தமக்கு ஏற்பட்டுவிட்டது வருந்தத்தக்கது' என்றார்.

தமிழக பாராளுமன்ற உறுப்பினர் பேசியபோது 1945ல் தான் இங்குவந்த போதும் இப்படி ஒரு மந்திரிக்கும் எம்.பி.க்கும் லடாய் ஏற்பட்டதாகவும். இப்போது இலங்கைக்கு வந்து இன்று இவ்விழாவில் கலந்து கொண்டபோதும், ஒரு அமைச்சருக்கும் எம்.பிக்கும் காரசாரமான கருத்துப் பரிமாறு ஏற்பட்டிருக்கின்றது என்றார்.

## சுப்பையாவுக்கும்..

(1.ம் பக்கத் தொடர்ச்சி)

இதே சமயம் மட்டக்களப்புப் பகுதியில் குடியேறியுள்ள மலைநாட்டுத் தமிழர்கள், என்ன நேர்ந்தாலும தாம் அந்த இடத்தை விட்டு வெளியேறுவதில்லை யென்று உறுதியுடன் இருக்கின்றனர்.

இதே சமயம், வடக்கு, கிழக்கில் மலையகத் தமிழர் குடியேறுவதை தடுக்க வேண்டுமென்று கோரி, பச்சை வகுப்பு வாதத்தை கக்கி ஓர் ஆசிரியத்தலையங்கத்தை 28-5-73 டெயிலி நியூஸ் தீட்டியிருக்கிறது.

இது சம்பந்தமாக இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் மட்டக்களப்பு அரசாங்க அதிபருக்கு பின்வரும் தந்தியொன்றையும் அனுப்பியுள்ளார்:-

'என்னுடைய சமூகத்தவர்களான இந்திய வம்சாவளியினர் உணவுப் பயிர்களைச் செய்கை பண்ணுவதற்கே காடுகளை வெட்டியிருக்கிறார்கள்.

'இந்த ஆண்டை உணவு உற்பத்தி ஆண்டு என்று பிரதமர் பிரகடனப் படுத்தியிருக்கிறார். உணவு உற்பத்தி ஆண்டுத்திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடத்துவதில் தமது பங்கை செலுத்துகிறார்கள் எனது சமூகத்தினர்.

'அவர்களைக் குடியெழுப்புவதற்கு அரசாங்க அதிகாரிகள் சிலர் மேலதிக சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள் என்பதை அறிந்து கவலையடைகிறேன்.

'அரசாங்க அதிகாரிகள் கட்டு மீறிப்போய் மேலதிகச் சட்ட நடவடிக்கைகளை எடுத்தால் சட்டமும் ஒழுங்கும் சீர்குலையும் நிலைமை ஏற்படலாம். ஆகவே உங்களுடைய அதிகாரிகள் தொடர்ந்து அந்த விதமான நடவடிக்கைகளில் ஈடுபடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.'

## மன்னாரிலும் குடியரசு விழா பகிஷ்கரிப்பு

மே மாதம் 22ந் திகதி குடியரசு தினத்தை துக்க தினமாக கொண்டாடுவதற்கு முன்னேடியாக, மன்னார் புனித சவேரியார் கல்லூரி மாணவர்கள் மே மாதம் 21ந் திகதி துக்க தினம் அனுசரித்து பாடசாலையைப் பகிஷ்கரித்தனர்.

பாடசாலை பகிஷ்கரிப்பு சம்பந்தமான துண்டு பிரசுரங்கள் வீதியெங்கும் ஒட்டப்பட்டிருந்தது. இவை மறுதினம் பொலிசாரால் அகற்றப்பட்டது. அத்துடன் சில மாணவர்கள் பகிஷ்கரிப்பு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டனர். ஆயினும் மன்னார் பா. உ. நடவடிக்கை எடுத்து அவர்களை விடுவித்தார். மறுநாள் பல இல்லங்களில் உதய சூரியன் கொடி பறக்க விடப்பட்டது. சில இடங்களில் பறந்த கொடியை பொலிசார், அகற்றினராயினும் அதுபின்பு ஏற்றப்பட்டது.

இருபத்திரண்டாம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட குடியரசு தின வைபத்தை வேடிக்கை பார்க்க ஒரு சிலர் கூடினர். ஏனைய மக்கள் யாவரும் பகிஷ்கரித்தனர்.

மேற்படி விழா சம்பந்தமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபேச்சுப் போட்டியை ஒரு ஆசிரியரின் மகனைத் தவிர ஏனைய மாணவர்கள் அனைவரும் பகிஷ்கரித்தனர்.

## "மே 22" நூல் வெளிவந்துவிட்டது

சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் அவர்களால் எழுதப்பட்ட "மே 22" எனும் நூல் வெளிவந்துள்ளது. புதிய குடியரசு அரசியல் திட்டம் தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள அநீதிகளை விவரமாக எடுத்துக்கூறும் இந்நூலில், குடியரசு அரசியல் திட்டம் கொண்டுவரப்பட்ட மே 22ம் நாள் தமிழ் ஈழத்தில் நடைபெற்ற போராட்டங்களைப் பற்றியும் திரட்டித்தரப்பட்டுள்ளது. நூலின் விலை: சதம் 50. வேண்டுவோர் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:-

சி. மகேந்திரன்,
6/3 சாளிமென் வீதி,
கொழும்பு-6.

## ஈழவேந்தன் உரை

கொழும்பு தாயபெனடிக்ற் கல்லூரி தமிழ்சங்க சார்பில் இத்திங்கள் 2ம் நாள் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் கலைவிழாவில் 'மொழியும் வாழ்வும்' என்ற தலைப்பில் திரு. ஈழவேந்தன் உரை நிகழ்த்துவார்.

## செல்வாவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் ஆகியோருக்கும் வரவேற்பு அளிக்கப்படும். அங்கிருந்து பிரதான வீதி வழியாக திரு. செல்வநாயகம் அழைத்து வரப்படுவார்.

முற்றவெளியில் பிரம்மாண்டமான மின் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்ட பந்தலின் கீழ் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். இந்தப் பொதுக் கூட்டத்திற்கு தந்தை செல்வா தலைமை தாங்குவார். இந்தக் கூட்டத்தில் கூட்டணித் தலைவர்கள், பா. உ.க்கள் ஆகியோர் உரையாற்றுவர்.

### கிளை திறப்பு விழா

திருகோணமலை முதலாவது தமிழர் கூட்டணிக் கிளையை உத்தியோகப்பூர்வமாக திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறந்துவைப்பார் இக்கிளையை அண்மையில் 'திருகோணமலை பா. உ. நேமிநாதன்சம் பிரதாயப்பூர்வமாகத் திறந்துவைத்தது தெரிந்ததே.

எதிர்வரும் ஜூன் மாதம் [illegible] கிளைத் திறப்புவிழாவும் நடைபெறும்.

## தமிழில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய பேரவையில் கேட்கவிருக்கிறார் காவலூர் பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினம்.

இலங்கை மின்சார சபையின் வழங்கல் துண்டிப்பு அறிவித்தலைத் தமிழில் வெளியிடவில்லை என ஒரன்பர் திரு. இரத்தினத்துக்கு அறிவித்துள்ளார். இவ்வாறு தமிழில் வெளியிடப்படாத படிவங்களைப்பற்றிய தகவல்களை ஒவ்வொரு அலுவலகத்திலுமுள்ள தமிழர்கள் தமக்கு நேரில் அறிவிக்குமாறு திரு. இரத்தினம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


யோகக்கலை

'யோக பலத்தினும் சிறந்த பலமில்லை
ஞான ஒளியினும் சிறந்த நண்பனில்லை
மாயையினும், கொடிய தளை இல்லை
ஆணவத்தினும் கொடிய பகை இல்லை.'

—கிரந்த ஸம்ஹிதை.

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 15 அனுப்பி விளக்கப்படங்களுடன் கூடிய யோகக்கலை என் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல. — 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரசாதனைகள் பல புரிந்த தமிழரசு வாலிப முன்னணி இன்று சோர்ந்து துவண்டு தூங்கிக் கிடப்பதேன்?

**ஆசீர்வாதம் ஹென்றி**

1949ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தளபதி திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களை ஆரம்ப காலத் தலைவராகக் கொண்டு 1950ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழரசு வாலிப முன்னணி அப்போது மிகவும் சுறுசுறுப்பான முறையில்செயல்பட்டு கட்சியின் செயல் திட்டங்கள் அனைத்தையும் நொடிப் பொழுதில் வாயுவேகத்தில் செயல் படுத்திவந்தது.

வாலிப முன்னணியின் தலைவராக உணர்ச்சி மிக்க வாலிபன் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இருந்து செயல்பட்டதினுல் தமிழ் மொழிப்பற்றும் ஆர்வமும் உள்ள தமிழ் இளைஞர்கள் தாங்களாகவே முன்வந்து சேர்ந்து தமிழர் போராட்டங்களில் முன்னணியில் நின்று போராடுவதற்கும் சிறை செல்வதற்கும் எத்தகைய துன்பங்களை அனுபவிக்கவும் தயாராக இருந்தார்கள்.

திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தலைவராகஇருந்தகாலத்தில் தமிழரசு வாலிப முன்னணியையும் அதன் வீரச் செயல்களையும் கண்டு சிங்கள அரசாங்கங்களும்சிங்கள வெறியர்களான இராசரத்தினு, மேத்தானந்தா, ஆர். ஜி. சேனநாயக்கா போன்றவர்களும் கதிகலங்கினுர்கள்.

தமிழரசுக்கட்சி சாத்வீக சமாதான வழி செல்லும்ஓர் புனிதமான இயக்கம். ஆனுல் தமிழரசு வாலிப முன்னணியோ ஓர் பலாத்கார இயக்கம் என்றே கருதிப் பயப்பட்டார்கள்.

1956ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் 1957ம் ஆண்டு வரலாற்றுப் புகழ் கொண்ட திருமலை மகாநாட்டின் பாதயாத்திரையின் போதும் பெரும் பங்கேற்று முன்நின்று வழி நடாத்திச் சென்றதும் 1958ம் ஆண்டுசிங்கள சிறீ அழிப்பின் போது முன்நின்று போராடிச் சிறை சென்றதும் 1958ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது சிங்களப் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள் சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டு இந்நாட்டில் அந்நியர்களாக, அகதிகளாக, அனுதைகளாக கப்பல்மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தில் வந்தடைந்த போது அமரர் வன்னிய சிங்கம் அவர்கள் தனது காரில் ஏற்றி தானே கரைச்செலுத்தி தமிழ் மக்களை அவர்களின் இலங்களில் சேர்த்த வேளையில் அமரர் அவர்களுடன் கூட இருந்து தமிழ் மக்களுக்கு செய்ய வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்ததுடன் 1961ம் ஆண்டு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழர்களின் ஒன்றுபட்ட பாரெரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை அடக்குவதற்கு மாகாணங்களில் உள்ள அந்த கச்சேரிகளிலும் வேறு பல அரசாங்க அலுவலகங்களிலும் மறியல்இயக்கப் போராட்டம் உள்ள விரதப் போராட்டங்களை நடாத்தி அதனுல் சிறை சென்றவர்களும் வகுப்புவாதிகளான இலங்கரத்தினு போன்ற சிங்கள அமைச்சர்கள் தமிழ் பிரதேசத்துக்கு வந்த போது கறுப்பு கொடி காட்டி எதிர்ப்பியக்கங்கள் பல நடாத்தி அதில் வெற்றி கண்டவர்களும் புகையிரத மூலம் யாழ்ப்பாணம் வந்த உதவிஅமைச்சர் திரு. எம். பி. டி. சொய்சா அவர்களை யாழ் புகையிரத நிலையத்தில் வைத்தே உடனடியாக கொழும்புக்கு திருப்பி அனுப்பியவர்களும் இந்த தமிழரசு வாலிப முன்னணி வீரர்களே அல்லாமல்வேறு யாருமல்ல.

இப்படியான முறையில் தமிழ் வாலிபர்கள் தம்மையும் தம் எதிர்காலத்தையும் இனபந்துக்களையும் சொத்துச் சுகங்கள் அனைத்தையும் முற்ருக மறந்து வாலிப முன்னணியின்கீழ் ஒன்றுபட்டு வியக்கத்தக்க பெரும் வீரதீரச் செயல்களை செய்து தமிழ் இனத்தின் மானத்தை காப்பாற்றியதுடன் தமிழ் அரசுக் கட்சியின் மரணப் படை போன்றும் இருந்து செயல்பட்டார்கள்.

திரு. அமிர்தலிங்கம் தொடக்கம் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த தாமரைக்குளம் செல்லையா அவர்கள் காலம் மட்டும் முன்னைய வேகம் குறையாது வாலிப முன்னணி தலைநிமிர்ந்து செயல்பட்டு வந்ததை எவரும் மறுக்கமுடியாது.

பாராளுமன்ற உறுப்பினரல்லாத சாதாரண வாலிபர்களான அமிர்தலிங்கம், துரைரத்தினம், செல்லையா போன்றவர்கள் வாலிப முன்னணியின் தலைவர்களாக இருந்து செயல்பட்ட காலமே வாலிப முன்னணியின் பொற்காலம் என்று கூறலாம்.

தமிழரசு வாலிப முன்னணிக்கு சாதாரண வாலிபர்களிலும் பார்க்க எம். பி. பதவிகளை வைத்திருக்கும் இளம் பிரதிநிதிகளை தலைவர்களாக்கினுல் அவர்கள்மூலம் வாலிப முன்னணி அதிக வளர்ச்சி அடையும் என்று வாலிபர்கள் கருதி மட்டக்களப்பு முதல்வர் திரு. செ. இராசதுரை அவர்களையும் மூதூர் பிரதிநிதி திரு. தங்கத்துரை அவர்களையும் அடுத்தடுத்து தலைவர்களாக வாலிப முன்னணி தெரிவு செய்ததினுல் வாலிப முன்னணி நினைத்ததுக்கு எதிர் மாருக செயல் இழந்து நடைமறந்து சோம்பேறிகள் கூட்டமாக வயோதிப முன்னணியாகவே மாறிவிட்டது.

தவருமல் மாதந்தோறும் வாலிப முன்னணி நிர்வாக சபை கூட்டங்களை நடாத்தி தமிழ் இனத்துக்கு வரப் போகும் ஆபத்துக்களை அறிந்து கட்சியையும் தட்டி எழுப்பி வாலிபர்களையும் செயல்வீரர்களாக்கி ஓர் பலம் வாய்ந்த நிறுவனமாக இருந்து செயல்பட்ட வாலிப முன்னணி இன்று செத்த பாம்பாகிவிட்டது.

தனிக்கொடி உயர்த்தி தனித் தமிழ் நாடு காண இளந்தலைவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தலைமையில் தமிழ் இனம் என்றுமே இல்லாத முறையில் போராடவேண்டிய இன்றைய நிலையில் வாலிப முன்னணியின் மகாநாட்டை நடாத்தி வாலிபர்களின் உணர்ச்சிகளை தட்டி எழுப்பி அவர்களை போராட்டத்துக்கு தயார் செய்யவேண்டிய பெரும் பொறுப்பு வாலிப முன்னணி தலைவருக்கும் நிர்வாக சபைக்கும் உரியது.

# மக்கள் குரல்

## கல்முனையில நடைபெற்றது இசைக்கச்சேரியா? வசைக் கச்சேரியா?

அப்பர், சுந்தரர், அருள் மணிவாசகர் பாடிய ஆயிரம் பாடல்கள் எத்தனையோ அழகு தமிழில் மிதந்து கிடக்கிறது: பக்திப் பாடல்களும் எத்தனையோ பரந்து கிடக்கிறது. சரி! இவைகளைச் சங்கீதம் என்று விட்டுவிட்டாலும் தமிழைப் பற்றி—தமிழ் நாட்டைப்பற்றி அமிழ்தினுமினிய அழகு தமிழிலே அள்ளித்தந்த வள்ளுவன், பாரதி ஆகியோரின் பாடல்களைப் பாடியிருக்கலாம். 'இவர்களை நாங்கள் அறியவில்லை—இவர்களெல்லாம் இலக்கிய கர்த்தாக்கள். இந்த இலக்கியப் பேச்சுக்கள்எங்களுக்கு விளங்காது' என்று சாக்குச் சொன்னுலும் சினிமாவிலே சிறீனிவாஸ் தொடக்கம் சௌந்தரராஜன் வரையும் லீலா தொடக்கம் சுசிலா வரையும் எத்தனையோ பாட்டுக்களைப் பாடியிருக்கிருர்கள். இதைவிட சுந்தரம்பாள் சுப்புலெட்சுமி ஆகியோர் பாடிய தனிப்பாடல்கள் எத்தனையோ இருக்கின்றன. இவற்றைத்தான் தமிழ்ப்பாடல்கள் என்று தமிழ்மக்கள் கேட்கிருர்கள். ரசிக்கிருர்கள். பாடுகிருர்கள். வானெலியிலும்கூட இவற்றைத்தான் ஒலிபரப்பவும் செய்கிருர்கள்.

ஆனுல் கல்முனை கடற்கரை கண்ணகி அம்மன் ஆலயத்திலே 13.5.73 அன்று நடைபெற்ற ஓர் இசைக்கச்சேரியிலே தமிழ்ப்பாடல்களுக்குப் பெரும் தட்டுப்பாடாகியது. லண்டன் மாநகரிலேயுள்ள தமிழர்கள் தமிழ் பேச்சைக் கேட்பதற்கு எவ்வளவு ஆவலுடன் இருப்பார்களோ அதே போன்றுதான் தமிழ் பாடல்களைக் கேட்பதற்கு மக்கள் இங்கு ஆவலுடன் இருந்தார்கள். ஐந்தோ ஆறு பாடல்களைத் தவிர ஏனையவைகளெல்லாம் சிங்களப் பாடல்களும் இந்திப் பாடல்களுமென்ருல் கேட்கவும் வேண்டுமா? இவர்களை—இவர்கள் பண்புகளை—இவர்கள் பாடிய பாட்டுக்களைப் பற்றி நினைக்கும் போது நெஞ்சு வெடித்துச் சிதறுகிறது. கச்சேரிகளில் கதைப்பது சிங்களம் எழுதுவது சிங்களம்மற்றைய காரியாலயங்களிலும் நடக்கிற அலுவல்களெல்லாம் சிங்களத்தில். இவைகளை அரசின் ஆட்சியென்று விட்டுவிடலாம் ஆனுல் இங்கே பாடிய பாட்டுக்கள் தமிழன் தமிழனை ஆள்கின்ற ஆட்சியா? கடற்கரை கண்ணகி அம்மன் ஆலய நிருவாக சபையிலே யாரும் சிங்களவர்கள் அங்கத்துவம் வகிக்கவில்லை. தனித் தமிழிலே சகலதும் நடைபெறுகின்ற ஆலயம் இது. இங்குள்ள மக்களும் தமிழர்களே. இசைக் கச்சேரியை ரசித்தவர்கள்—பார்த்தவர்கள் அனைவரும் தமிழர்களே: இசைக் கச்சேரியைநடாத்தியவர்களும் தமிழர்களே. ஆனுல் பாடிய பாட்டுக்கள் 'பிறமொழிப் பாடல்கள்' என்பதை நினைக்க நினைக்க எம் நெஞ்சு வெடித்துச் சிதறுகிறது.

கொழும்பு, குருநாகல், புத்தளம், சிலாபம் போன்ற சிங்களவர்களும் தமிழர்களும் வாழ்கின்ற பிரதேசங்களில் உள்ள கோயில்களில் கூட நடைபெறுகின்றவிழாக்கள் தனித்தமிழிலேயே அமைவதைக் காண்கிறேம். ஆனுல் அங்கே சிங்களமும் இடம் பெற்ருல் பிழைசொல்வதற்கில்லை. ஏனெனில் தமிழ்க் கோயில்களுக்கு வணக்கத்துக்காக வருகின்ற எத்தனையோ சிங்களவர்கள் இருக்கிருர்கள். ஆனுல் இங்கே நடைபெற்ற விழாவிலே பிறமொழிப் பாடல்கள் இடம்பெறுவதற்கு என்ன நியாயம்? அதுவும் ஒன்ரு இரண்டா? பதினென்று நாற்பத்தைந்து தொடக்கம் ஒன்று முப்பத்தைந்து வரையும், ஏறக்குறைய ஒன்றேகால் மணித்தியாலம் நடைபெற்ற இசைக்கச்சேரியில் ஐந்தோ ஆறு பாடல்களைத் தவிர ஏனையவைகளெல்லாம் பிறமொழிப் பாடல்கள் என்ருல் இதை மன்னிக்கவும் முடியுமா?

சி. சங்கரப்பிள்ளை
கல்முனை

## ராதையின்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

'பதில் சொல்ல மாட்டாயா?'

'கனவு — இன்பக் கனவு ஒன்று கண்டேன். அதன முடிவிலும் இப்படி ஒரு நிலையில் நான் இருந்தேன் கண்ணு.'

'ஐம் ஆம் வாசு கண்ணு இல்லே.'

'இல்லைக் கண்ணு. சொன்னவன் கண்ணன். சொல்பவன் கண்ணன்.'

'என்ன ராதா கீதா உபதேசமா?' என்று அவன் கேட்டபொழுது திடீரென மின் விளக்கு அணைந்து விட்டது.



# சங்கப் பலகை

## ரவீந்திரநாத் தாகூரின் மூன்று நாடகங்கள்

தமிழாக்கம்:- வை. மூத்துக் குமாரசுவாமி
பிரசுரம்:- உமா சிவா பதிப்பகம்
கே. கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்.

உரிமையோடு வாழ எண்ணிய பஞ்சாபி மக்களின் எதிர்ப்பினை எதேச்சாதிகாரப் போக்கில் அடக்குவதற்கு ஆட்சியாளர் கையாண்ட முறையை எதிர்த்து 'சேர்' என்ற பட்டத்தைத் துறந்த உலகமா கவி தாகூரின் சமுதாய உணர்வைப் பிரதிபலிக்கும் சித்ரா, வேந்தனும் அரசியும், பலி எனும் மூன்று நாடகங்களைத் தமிழிலே ஆக்கித் தந்துள்ளார் திரு. வை. முத்துக்குமாரசாமி.

முதன் முதலில் ஆங்கிலத்தில் நல்லை நாவலர் பற்றியும் தமிழறிஞர் தாமோதரம் பிள்ளை பற்றியும் ஏற்கனவே நூல்களை ஆக்கித் தந்த ஆசிரியர் தாகூரின் நாடகங்களைத் தமிழ் உலகு சுவைத்தற்கும் தமிழாக்கம் செய்தமையை தமிழ் கூறும் நல்லுலகு பாராட்டத்தான் வேண்டும்.

தமிழ்ப் பெரியாரின் அரும் பணியை ஐரோப்பிய உலகு அறிய வைத்தது முதற் செயல்; பிறமொழியில் அமைந்த உலகப்பெரு இலக்கியங்களை தமிழ் உலகு அறிய வைத்தது பின்னைய செயல்.

காதலியின் இருதயங்களைக் கொள்ளை கொள்ளுதற்குவேண்டிய மென்லியல்புகளுக்காகத் துடித்த வனிதையைச் சித்தரிப்பது சித்ரா.

காதலிச்சைக்காக ஏங்கி நிற்கும் கனவுக்கும் மக்கள் சேவைக்கே முதன்மையளிக்கும் மன்னவர்க்கு மிடையிலான போராட்ட ஓவியம் வேந்தனும் அரசியும் ... உயிர்பலியை இழிக்க வேண்டியதை உணர்த்தி நரபலியைக் கண்டிக்கிறது பலி.

ஈழத்து வானொலியில் இடம்பெற்ற இம்மூன்று நாடக நூல்களில் ஒன்று இலண்டனில் எழுதப்பட்டத்தை அறியும் போது ஆசிரியரின் தமிழ்ச் சேவையினைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அணிந்துரையில் கலையரசு சொர்ணலிங்கம் கூறியுள்ளது போல் ஒவ்வொரு கல்வி நிலையங்களிலும் நாடக சபைகளிலும் நடிக்கப்பட்டு இரசிக்கப்படக் கூடியவையாகும்.

தாகூரின் வாழ்க்கை வரலாற்றை மட்டுமல்லாமல், அவர் வங்க மொழியிலும் ஆற்றிய எண்ணற்ற நாடகங்களைப் பற்றியும் இந்த மூன்று நூல்களின் வாயிலாகவும் தமிழ்ப்பெருங்குடி மக்கள் அறியும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளனர் வெளியீட்டினராகிய உமா சிவா பதிப்பகத்தினர்.

— நவசோதி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




## அத்தியாயம் (11)

ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடம் காட்டும் கருணையை அவனுடைய பலவீனம் என்றோ அன்றி பயம் என்றோ மதிப்பிடுபவன் மனித சுபாவத்துக்கே மதிப்பளிக்கத் தவறுகின்றான். இதனால்தான் அறிஞர்களோடு அறிவிலிகள் மோதவும் தவிர்க்கவும் ஏதுவாகின்றது. கருணைக்கு இனம் இல்லை அது தூய உள்ளத்திலின்றும் தோற்றும் உண்மையின் பிரதிபிம்பம். இப்படிப்பட்ட ஒருநிலை தான் ராதாலட்சுமியிடம் வாசுவுக்கு ஏற்பட்டதென்று கூறமுடியாதாயினும், அவளிடம் அவன் கொண்டிருந்த கருணையே அவள் விடுத்த கோரிக்கையை அவன் ஏற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தது.

அறைக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டதும் மின் விளக்கின் சுவிட்சைப் போட்டுவிட்டு வெளியே வந்த ராதா, வீட்டு முகப்பில் தோழிகள் சிலர் நிற்பதைப் பார்த்துவிட்டு ஓடிச் சென்று வரவேற்றாள்.

'ஹலோ ராதா! எப்படி? எங்கேடி வாசு?' என்று கிண்டலாகவே கேட்டாள் பாமினி.

'உஸ் சத்தம் போடாதே: படித்துக்கொண்டிருக்கின்றார்' என்றாள் ராதா.

'ஏன்டி ராதா நீயும் சேர்ந்து படிக்கின்றாயா?'

'ஏன்டி பாமி! நீ வம்பளக்கவா வந்தாய்?'

'நோ... நோ... அப்புறம் காதல் போதையில் பரீட்சையில் கோட்டை விட்டு விடாதே என்று அறிவுரை கூறவே வந்தேன்டியம்மா.' என்று பாமினி கூற எல்லோரும் சேர்ந்து சிரித்தனர்.

அதன் பின்னர் பத்து நிமிடங்கள் வரையில் பல்வேறு கதைகளிலும் ஈடுபட்டிருந்த பெண்கள் கோஷ்டி அவ்விடம் விட்டகன்றதும், ராதாலட்சுமி வாசு இருந்த அறைக்குச் சென்றாள்.

ராதாலட்சுமி வெளியே சென்றதும் பல்வேறு சிந்தனையில் ஆழ்ந்திருந்த வாசுதேவன் அந்தச் சோபாவிலேயே தூங்கிவிட்டான். தூக்கத்திலும் அவன் முகத்தினைப் பார்க்கும்பொழுது தெரிந்த ஒருவித தனிக் கவர்ச்சி அவள் உள்ளத்தில் இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது. சோபாவின் விளிம்பில் ஒரு கையை மடக்கித் தலைக்கு ஆதாரமாக வைத்துக் கொண்டு மல்லாந்து படுத்திருக்கும் அவன் மார்பில் முகம் புதைத்துக் கிடக்க வேண்டும்போல் இருந்தது ராதாவுக்கு. ஓசைப்படாமல் அவனருகில் சென்று அமர்ந்தாள். அவனுடைய இடையோடு இணைய நெருக்கமாக இருந்தபொழுது அவள் உள்ளத்துணர்வுகளெல்லாம் இன்பகீதமிசைத்தன. நினைவு அலைகளின் வேகம் அவள் மார்பின் பரிமாணத்தை வரம்புக்கு மேலாக உயர்த்தியது: உணர்வுகள் கட்டுக்கடங்காத நிலையில் அவள் உடல் அக்கினிக் குழம்பெனக் கொதித்துக் கொண்டிருந்தது.

ஒன்றைச் செய்கை முறையில் கையாளுமுன்னர் நாம் மனோ சக்திக்கு வேலைகொடுத்து இப்படிச் செய்தால்... என்று நிலைநூக்கம் செலுத்த ஆரம்பிக்கும்பொழுது உணர்ச்சிகளுக்கு உடல் அடிமையாகிவிடுகின்றது. இந்நிலையில் பெரும்பாலான மனிதர்களின் அறிவு உணர்ச்சிக்கு அடிமையாகி நல்லது எது கெட்டது எது என்பதைக்கூட ஆராயாமல் செயலாக்கத்தில் இறங்கிவிடுகின்றது.

ஆனால் ராதாவின் உள்ளத்தில் ஆசை வெள்ளம் பொங்கிப் பிரவகித்தாலும் அதனைக் கட்டுப்படுத்தி சிறுகச் சிறுக விடுத்து அதில் தினம் தினம் நனைந்தின்புறவே விரும்பினாள். அவளுடைய செவ்வல்லிக் கரம் அவனது மார்பில் தவழ்ந்தது. அவள் செம்பவள இதழ்கள் அவனையறியாமலே, 'வாசு வாசு' எனக் குழைந்தன. அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தவன் மார்பில் அவளது கரம் தவழ்ந்து விளையாட முற்பட்டதும் உணர்வு வரப்பெற்றவனாய் விழித்துக்கொண்டான் வாசுதேவன். மீண்டும் அவள் வாசு என்று அழைத்த பொழுது, 'என்ன ராதா?' என்று எழுந்திருக்க முயன்றான்.

'வேண்டாம் வாசு. நீங்கள் இப்படியே படுத்திருங்கள். உங்கள் உறக்கத்தைக் கெடுத்திட்டேன் இல்லையா?' என்று இரு கரங்களாலும் அவனை எழுந்திருக்கவிடாது தடுத்தாட்கொண்டாள்.

'ராதா! செய்வதையும் செய்துவிட்டுக் கேள்வியையும் கேட்டால் நான் என்ன பதில் சொல்வேன்?'

'கோபமா வாசு?' என்று கேட்டுக்கொண்டே மேலும் சரிந்துகொண்டாள் ராதாலட்சுமி. அவனுக்கும் அவளுக்கும் இடையே இருந்த இடைவெளி குறைந்து அவள் ஆடை அவன் மார்போடு உராய்ந்து உறவாடியது.

'கோபமா? என்று நீ கேட்பதற்கு என்னால் பதில் சொல்லமுடியாது ராதா. கோபம் என்று தோன்றினால் உன் கட்டளைக்குட்பட்டுக் கிடப்பேனா?'

'நீங்கள் என்னப்பா எதற்கும்...' என்று சிணுங்கியவள், 'வாசு நீங்கள் வெளியே எதை மறைத்தாலும் உங்கள் இதயம் ஏதோ எல்லாம் கூறுகின்றதே.'

உண்மையாகவா? அப்படி என்னதான் கூறுகின்றது?'

'இதுவாகக் கேட்கலையே. கேட்டுச் சொல்லுகின்றேன்.' என்று மார்பில் செவி படும்படியாகக் கன்னத்தைப் பதித்துக்கொண்டு, இரு கரங்களாலும் அவன் தோள்களை இறுகப் பற்றிக்கொண்டாள்.

அவள் தனது அற்ப ஆசைகளை எப்படி எல்லாம் நிறைவேற்றிக்கொள்ள முனைகின்றாள் என்பதையும், அதற்கு அவள் கூறும் குழந்தைத்தனமான சமாதானத்தையும் கேட்டுச் சிரிக்கவேண்டும் போலிருந்தது வாசுவுக்கு.

மனிதர்கள் காதல் போதையில் குழந்தைகளை விடக்கேவலமாக நடந்து கொள்கின்றார்களா? அல்லது மிருகத்தை விட வெறித்தனமாக நடந்து கொள்கின்றார்களா? சமுதாய வாழ்வில் கட்டுக்கோப்புக்களை மீறுமளவும் மீறியும் நடந்து கொள்ளும் மனிதவர்க்கம் சுதந்திரம் கிடைக்கும் பொழுது எப்படியெல்லாமோ நடந்து கொள்வது இயல்பு. இவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு கற்பனாவாதிகள் கண்டபடி உளறுவதும், போற்றுவதும், தூற்றுவதும் தெரியாத்தனமாக அல்லது பற்றின் காரணமாக இல்லையேல் அப்படி ஒரு சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்காமல் போனதினால் ஏற்பட்ட விரக்தியின் காரணமாகவும் இருக்கலாம். உளவியலை ஒரு பாடமாகக் கற்று வந்ததினாலோ என்னவோ வாசுதேவன் இவற்றையெல்லாம் பலவீனங்கள் என்ற வரிசையில் வைத்துத் தீர்வு கண்டு கொண்டு அமைதியுடனிருந்தான்.

வாசுதேவனின் மௌனம், அவன் உடலோடு உடல் சேரத் தழுவியதினால் ஏற்பட்ட ஸ்பரிசம், தன் நினைவுகள் செயலாகும் சந்தர்ப்பம் இத்தனையும் ராதாலட்சுமியின் உள்ளத்தில் வேறு நினைவுகளுக்கு இடமில்லாத ஓர் இன்ப சாம்ராட்சியத்தினை ஏற்படுத்தி விட்டது.

இன்பமோ துன்பமோ எல்லாம் அடிப்படையில் பார்க்கப்போனால் ஒருவித வேதனையின் பிரதிபலிப்பே. இன்பத்தின் பிரதிபலிப்பை அடிப்படையாகக் கொண்ட வேதனைகளை மனிதன் சகித்துக்கொள்ளுகின்றான். அதே போன்று கிளர்ந்தெழுந்த உணர்ச்சி வெள்ளத்துக்கு அணைபோட்டுக் கட்டுப்படுத்தி வேதனைப்பட்டாலும் சிறுகச் சிறுகப் பெறும் அற்பசுகத்தில் அவ்வேதனை அவளுக்கு ஒரு பொருட்டாகத் தென்படவில்லை: அந்த இன்ப சுகானந்த மயக்கத்தில் அவன் மார்பில் மயங்கிக்கிடந்தாள்.

'ராதா ராதா' என்று அவள் முதுகை வருடினான் வாசுதேவன். அந்த வருடல் [illegible] சென்றது. [illegible] ராதாலட்சுமி.

வானவீதியில் மேகங்களுக்கிடையே பறந்து கொண்டிருப்பது போன்ற மயக்கம் கந்தர்வ கானத்தினால் கவரப்பட்டுச்செல்லும் தேவ கன்னிகை என்ற நினைப்பில் அந்த நினைவுக் களிப்பில் அவள் காவிய நயனங்கள் அங்குமிங்கும் யாரையோ தேடுகின்றன. அங்கே ஒரு மலர் வனத்தின் நடுவில் சௌந்தர்ய புருஷனாக வேய்குழலில் இசை பொழிந்து கொண்டிருக்கின்றான் கண்ணன். கமாஸ் ராகத்தில் வேய்குழலோசை கேட்டு மயங்கிச் சென்றவள் அவனை அணுகிப் பார்த்த பொழுது அவன் தன் காதலன் வாசுதேவனே என உணர்கின்றாள். அவன் தோள்களை இறுகப்பற்றி விரிந்து பரந்த அவன் மார்பில் செவ்விதழ் பதிய முத்தமழை மொழிகின்றாள்.

வேய்ங்குழல் மீட்டுவதை நிறுத்தி விட்டு ராதாலட்சுமியை அணைத்துக்கொள்ளுகிறான் அந்த மாயக் கண்ணன். மூச்சு முட்டத்திணறுகின்றாள் ராதாலட்சுமி. அவனுடைய அன்புத் தழுவலில் கட்டுண்டவாறே, 'கண்ணா! என்ன இது?' என்று சிணுங்கினாள்.

'என்னவென்று என்னையா கேட்கின்றாய்? ராதா! நீ சற்றுமுன் என் மார்பின் மீது என்னவோ எல்லாம் செய்தாயே. அதை என்னவென்று சொல்வதாம்?'

'அது... அது ... சொல்லித் தெரிவதில்லையே கண்ணா.'

'அப்படியா' நல்லது. அது சரி ராதா வள்ளுவரே கூறியுள்ளார் காதலர் இருவர் கட்டித் தழுவினால் தென்றல் கூட நுழைய முடியாதாம் அந்த இருவர்க்கிடையிலும். அப்படியான நெருக்கம்...ம்' என்று குறும்புடன் கண்ணைச் சிமிட்டி அவளை மேலும் நெருக்கி இறுக்கமாக அணைத்தான். நாணம் மேலிடக் குபீரெனச் சிரித்துவிட்டாள் ராதா.



'என்ன சிரிப்பு? என்றான் பொய்க்கோபத்துடன்.

'வள்ளுவர் அப்படிக் கூறினாரோ என்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் நீங்கள் அப்படிச் செய்கின்றீர்கள்.'

'ராதா! என்னை என்னவென்று நினைத்து விட்டாய்? என்று திடீரென அவளைத் தழுவிய கரங்களை விலக்கிக் கொண்டான். தவறி விழுந்த பூங்கொத்துப் போலச் சோர்ந்து விழுந்தாள் ராதா. அந்த அதிர்ச்சி நீங்குமுன் திரும்பிப் பார்க்கின்றாள். கண்ணனைக் காணவில்லை. அவன் மாயமாய் மறைந்து விட்டான்.

'கண்ணா! நீ என்னைவிட்டு ஓடி மறையலாம். ஆனால் என் நெஞ்சை விட்டு ஓட முடியாதே! கண்ணா என் உள்ளத்தோடு உள்ளமாய் உணர்வாய் கலந்தபின்பு எங்கே போய் மறையமுடியும்? என்று அவள் கூறிய பொழுது, காற்றினிலே கலந்து வந்தது அந்தத் தேனினுமினிய குழலோசை காற்றோடு கலந்து கருத்தைக் கவரும் அந்த இனிய ஒலியில் தோய்ந்து எழுந்தாள் ராதை. அவள் உடல் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தேன் பிலிற்றும் இனிய மலர்களாக விரிந்து மலர்ந்தன. அவள் இதயம் விம்மியது: உணர்வுகள் ஒன்றுகூடி அவள் இதய தாபத்தை வெளிக்கொணர்ந்தன:

அவளுடைய செம்பவள இதழ்கள் அசைய,

'கண்ணன் என்தன்
காதலன்
கண்ணில் ஆடும்
மாயவன்
என்னைச் சேர்ந்தவன்
என்றும் என்னைச்
சேர்ந்தவன்

என்று அவள் முடித்த பொழுது

'காதல் தேவன் கோயிலில்
மாலை மாற்றினன்
காலம் வரும் காத்திருப்
பேரம்
என்று கூறினன்'

என்று அவன் குரல் காற்றோடு காற்றாய் மிதந்து வந்தது. குரல் வந்த திக்கெல்லாம் அவன் எழில் வதனத்தைத் தேடினாள் ராதா. அவளுடைய கார்குழல் காற்றில் பறந்து அவள் முகத்தை மூடியது. அதே சமயம் அவன் கருங்குழலை நீவியபடியே,

'நீலவண்ணப் பூங்குழல்
முகத்தை மூடுதே
நாணம் வந்து போன
பின்பு
சுகத்தை தேடுதே'

என்று அவளை மீண்டும் அணைத்துக்கொண்டான் அந்த மாயக் கண்ணன்.

'கண்ணா! இனி என்னை விட்டிட்டு ஓட மாட்டாயே: என்னோடு கோபிக்க மாட்டாயே. சொல்லு கண்ணா சொல்லு!' என்று வாய் விட்டே கத்தி விட்டாள்:

இவ்வளவு நேரமும் தன் மார்பின் மீது படுத்து இன்ப உறக்கத்தில் கிடந்தவளின் அற்ப பேராசையைக் கெடுத்துவிடக் கூடாது என எண்ணிப்பேசாமலிருந்த வாசுதேவன், அவள் வாய் விட்டுப் புலம்ப ஆரம்பித்ததும், 'ராதா! ஏய் ராதா!' என்று முதுகில் தட்டினான். திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் ராதா, அவளுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை:

'ராதா'

'ம்'

'உண்மையிலேயே தூங்கி விட்டாயா? இல்லைக் கனவு மயக்கமா?

'ஹூகும்'

'ஏய் ராதா! பொய் சொல்லாதே. என்னை என்ன கட்டில் மெத்தை என்று நினைத்தாயா? நான் இவ்வளவு நேரமும் பட்ட பாடு போதாதா? இரவு பூராக இப்படியே இருக்கணுமா?" என்று செல்லமாக அவள் கழுத்தில் கிள்ளினான்:

கனவிலும் கற்பனைக் கதைகளிலும் மட்டும் வரும் ஓர் இனிமை எழில் மிக்க காட்சி தன் சொந்த வாழ்விலும் இடம் பெற்றிருப்பதை எண்ணி அகமகிழ்ந்த ராதாலட்சுமியின் உளநிலை எழுத்தில் வருணிக்க முடியாத ஓர் உன்னத நிலையாகும்.

'என்ன ராதா நான்கேட்பது காதில் விழுகின்றதா?"

'ம்'

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தாபல் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.


இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

லிடோ (யாழ்நகர்)

8ம் திகதி முதல்

கிங்ஸ்லி - பிளாசா

ஜெய்சங்கர், லக்ஷ்மி முத்துராமன், சுந்தரராஜன், மனோரமா, மற்றும் பலர் நடித்த

ராணி

யார் குழந்தை



138 வது தினம்

கெப்பிட்டல் (கொழும்பு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

சிவாஜி வாணிஸ்ரீ

—நடித்த—

வசந்தமாளிகை

3வது வாரம் காட்சியளிக்கிறது

கெயிட்டி மற்றும் இரு திரைகளில்

ரவி ஏரம் சுடரும் சூறாவளியும்

புது முகங்கள் சந்திரமோகன் ஜெயா

ஜெமினி முத்துராமன் நிர்மலா தேங்காய் சீனிவாசன் மனோரமா எம். ஆர். ஆர். வாசு

அன்பு வந்தது
அனுபவம் தானே வரவேண்டும்
முத்துமணிக் கண்ணனுக்கு
பாடல்கள் உங்கள் உள்ளத்தில் சுடர்விட இன்றே பாருங்கள்

2வது மாதம்!!

செல்லமகால்

சிவாஜி, நாகேஷ் முத்துராமன்

நடித்த

3 தெய்வங்கள்

( வண்ணக் கலர் )

வெகு விரைவில்

காசே தான் கடவுளடா

3 வது ஜனத்திரள் வாரம்!

சென்ட்ரல் ராணி (யாழ்நகர்)

தமிழ் நாட்டில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது

முத்துராமன், ஜி. வரலெட்சுமி,

பிரமிளா, ரங்கராவ், ராகவன், ஓ. ஏ. கே. தேவர், ரி. ஆர். ராமச்சந்திரன், ஆர். வரலெட்சுமி

—நடித்த— கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்



வாழையடி வாழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ஏ. இலக்கத்தில் 1973ம் வருடம் ஜுன் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.